விலை ரூபா: 10.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்: ஆறு

சங்கு 08 வள்ளுவர் ஆண்டு 2038 வைகாசி 09 புதன்கிழமை (23.05.2007) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 155




## சுதந்திரக்கட்சியினது தீர்வுயோசனை யதார்த்தமற்ற யோசனைக்கு உதாரணம்

### என்கிறார் ரவி கருணாநாயக்க எம்.பி.

(கொழும்பு)

நாட்டில் புரையோடிப்போயுள்ள இனப் பிரச்சினையை மேலும் சிக்கலுக்குள்ளாக்கும் வகையிலான தீர்வு யோசனையையே சிறிலங்கா சுதந்திரக்கட்சி முன்வைத்துள்ளது. 1984 ஆம் ஆண்டு இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக விவாதிக்கப்பட்ட மாவட்ட சபை கோட்பாடே தற்போது மீண்டும் முன்வைக்கப்பட்டுள்ளது. இது மீண்டும் நாட்டை கலியுகத்துக்கு தள்ளி விடும் முயற்சியாகும் என்று ஐக்கிய தேசிய கட்சியின் கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் ரவிகருணாநாயக்க தெரிவித்தார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலைமை குறித்து கருத்து தெரிவிக்கையில் அவர் மேற்கண்டவாறு கூறினார். இவ் விடயம் குறித்து "அவர் மேலும் கூறியதாவது, சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் இனப்பிரச்சினை தீர்வு யோசனைகள் இதுவரை சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படவில்லை.

அரசாங்கத் (06 ஆம் பக்கம் பார்க்க)


## வன்னிப்பகுதியில் விமானத் தாக்குதல்

(கிளிநொச்சி)

விமானப்படைக்குச் சொந்தமான இரண்டு குண்டு வீச்சு விமானங்கள் வன்னியில் நேற்றுக் காலை மூன்று தடவைகள் தாக்குதலை நடாத்தியுள்ளன. மக்கள் குடியிருப்புக்களை இலக்குவைத்து காலை 6.30 மணியளவில் மேற்கொள்ளப்பட்ட இந்தத் தாக்குதலால் சேதங்கள் எதுவும் ஏற்படவில்லையென விடுதலைப்புலிகளின் இராணுவப் பேச்சாளர் கூறியதாக ஏ.பி.செய்தி வெளியிட்டுள்ளது.

வீசிய குண்டுகள் அருகில் உள்ள காட்டுப்பகுதிகளில் (06 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு, கிழக்கு மாகாணங்களுக்கு தனித்தனியே கொடிகள் அறிமுகம்




## ஆளுநர் பணிமனையில் நேற்று ஏற்றிவைப்பு

(திருகோணமலை)

வடக்கு,கிழக்கு மாகாணங்களுக்கு தனித்தனியான கொடிகள் உருவாக்கப்பட்டு அவை நேற்று திருகோணமலையிலுள்ள ஆளுநர் அலுவலகத்தில் உத்தியோகபூர்வமாக ஏற்றிவைக்கப்பட்டது.வடக்கு,கிழக்கு மாகாணங்களின் இணைப்பு சட்டரீதியற்றது என்ற உயர் நீதிமன்றத்தின் உத்தரவையடுத்து தனித்தனியாக பிரிக்கப்பட்ட வடக்குக் கிழக்கிற்கு கொடிகள் உருவாக்கப்பட்டுள்ளன. (06 ஆம் பக்கம் பார்க்க)




## ஜனாதிபதி மகிந்த நாடு திரும்பினார்

(கொழும்பு)

ஜனாதிப்தி மகிந்த ராஜபக்ஷ நேற்று இரவு 7.35 மணியளவில் குவைத்திலிருந்து நாடு திரும்பினார்.அவருடன் சென்ற 125 பேரைக் கொண்ட குழுவினரும் நாடு திரும்பினர். ஜோர்தானில் நடைபெற்ற மாநாட்டில் பங்கு பற்றச் சென்ற ஜனாதிபதி குவைத்துக்கும் விஜயம் செய்தார்.இதன்போது பல தலைவர்களையும் சந்தித்து கலந்துரையாடல்களையும் நடாத்தியுள்ளார். (ச-3)

## யாழ்.மாணவர்கள் விடுவிக்கப்படாவிட்டால் ஐ.நா.சபையில் முறையிடவேண்டி ஏற்படும்

### தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்ட மூன்று பாடசாலை மாணவர்கள் விடுவிக்கப்பட வேண்டும். இல்லையேல் ஐக்கிய நாடுகள் மனித உரிமை மன்றத்தில் முறையிடப்படும் என யாழ். மாவட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிகாந்தா நேற்று நாடாளுமன்றில் தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் (06 ஆம் பக்கம் பார்க்க)

## சுன்னாகத்தில் நேற்று! இளைஞனின் சடலம் மீட்பு

(யாழ்ப்பாணம்)

சுன்னாகம் புகையிரத வீதி பொலிஸ் நிலையத்திற்கு அண்மையாக நேற்று முன்தினம் காணாமல் போன இளைஞர் ஒருவரின் சடலம் நேற்றுக் காலை வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த திருச்செல்வன் திருபரன் (வயது 19) என்ற இளைஞனின் சடலமே வெட்டுக்காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளது. (06 ஆம் பக்கம் பார்க்க)

பேரைக் கொண்ட குழுவினரும் நாடு திரும் பினர். ஜோர்தானில் நடைபெற்ற மாநாட்டில் பங்கு பற்றச் சென்ற ஜனாதிபதி குவைத்துக் கும் விஜயம் செய்தார். இதன்போது பல தலைவர்களையும் சந்தித்து கலந்துரையா டல்களையும் நடாத்தியுள்ளார். (ச-3)

## தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணத்தில் கடத்தப்பட்ட மூன்று பாடசாலை மாணவர்கள் விடுவிக்கப்பட வேண் டும். இல்லையேல் ஐக்கிய நாடுகள் மனித உரிமை மன்றத்தில் முறையிடப்படும் என யாழ். மாவட்ட தமிழ்த்தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.சிறிகாந்தா நேற்று நாடா ளுமன்றில் தெரிவித்தார்.

தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் (06 ஆம் பக்கம் பார்க்க)

தினம் காணாமல் போன இளைஞர் ஒரு வரின் சடலம் நேற்றுக் காலை வெட்டுக் காயங்களுடன் மீட்கப்பட்டுள்ளது.

சம்பவத்தில் அதே இடத்தைச் சேர்ந்த திருச் செல்வன் திருபரன் (வயது 19) என்ற இளை ஞனின் சடலமே வெட்டுக்காயங்களுடன் மீட் கப்பட்டுள்ளது. (06 ஆம் பக்கம் பார்க்க)

## தற்கொலைப் படகு படையினரால் மீட்பு

(கொழும்பு)

கடற்புலிகளின் தற்கொலைப்படகொன் றை படையினர் நேற்று முன்தினம் காலை மட்டக்களப்பு பனிச்சங்கேணி களப்புப் பகுதி யில் கண்டு பிடித்துள்ளதாக தேசிய் பாது காப்புக்கான ஊடக மத்திய நிலையம் தெரி வித்துள்ளது.

விசேடமாக வடிவமைக்கப்பட்ட இப் படகி னுள் நீர் உட்புகாவண்ணம் ஒரு பகுதி அமைக் கப்பட்டு, அதனுள் கிளைமோர்கள் 4 மற்றும் 120 மி.மீ.ஷெல் போன்றவைகள் மறைத்து வைக்கப்பட்டிருந்தன. இப் படகினை புலிகள் கடந்த ஜனவரி (06 ஆம் பக்கம் பார்க்க)

# நாட்டின் பிரதான உரிமைகள் சிங்கள மக்களுக்கே உள்ளது

## பௌத்தமே தேசிய மதம்;ஹெல உறுமயவின் தீர்வு யோசனையில் இது தெரிவிப்பு

(கொழும்பு)

நாட்டின் அனைத்து பிரதான உரிமை களும் சிங்கள மக்களுக்கே உள்ளன. சிங் கள மக்களே இந்த நாட்டின் தேசிய உரிமை யுடைய இனத்தவர்கள். அந்த வகையில் சிங்கள மக்களுக்கே நாட்டின் அனைத்து விடயங்களிலும் ஏகபோக உரிமையுள்ளது.

இந்த கோட்பாட்டின் அடிப்படையிலேயே இனப்பிரச்சினைத்தீர்வுக்கான யோசனை களை ஜாதிக ஹெல உறுமய தயாரித்துள் ளது என்று ஹெல உறுமயவின் ஊடகப் பேச்சாளர் நிசாந்த ஸ்ரீ வர்ணசிங்க தெரிவித் தார். எமது கட்சியின் யோசனைகள் அடுத்த வாரம் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும்.

தற்போது தீர்வுயோசனை சட்டநிபுணர் களின் ஆய்வுக்குட்பட்டு வருகின்றது என்று அவர் கூறினார். இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக ஜாதிக ஹெல உறுமய தயாரித் துள்ள யோசனை தொடர்பாக கருத்துத் தெரி விக்கையிலேயே (06 ஆம் பக்கம் பார்க்க)

# அநுராதபுரம் பகுதியில் மர்ம விமானம் பறப்பு

(கொழும்பு)

அநுராதபுரம் பகுதியில் நேற்றுக் காலை இரண்டு இலகுரக விமானங்கள் பறந்ததாக தகவல் அளிக்கப்பட்டதையடுத்து அது குறித்து விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக விமானப்படை அறிவித்துள்ளது.

நேற்றுக் காலை திடீரென இரண்டு இலகு ரக விமானங்களை அநுராதபுரம் பகுதி மக் கள் கண்டுள்ளனர். இதனையடுத்து அவர்கள் இராணுவத்தினருக்கு உடனடியாக அறி வித்தனர். இவ் அறிவித்தலைத் தொடர்ந்து கொழும்பில் முக்கிய இடங்களில் விமான எதிர்ப்பு ஏவுகணைகள் தயார் நிலையில் வைக்கப்பட்டிருந்தன என செய்திகள் தெரிவித்தன.

இவ் இரு விமானங்களும் வன்னிப் பகுதியிலிருந்து புறப்பட்டு மீண்டும் உடனடியாகவே அவை வன்னிப் பக்கம் திரும்பியதாக அநுராதபுரம் மக்கள் தெரிவித்துள்ளனர். (ச-5)

# ஐ.தே.கட்சியும் ஜே.வி.பியும் பொறுப்பற்று செயற்படுகின்றன

## அரசாங்கம் குற்றச்சாட்டு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சியும் ஜே.வி.பியும் இனப்பிரச்சினை தீர்வு விடயத்தில் மிகவும் பொறுப்பற்ற விதத்தில் செயற்பட்டு வருகின் றன. இந்த இருகட்சிகளும் இதுவரை இனப் பிரச்சினை தீர்வு தொடர்பான யோசனை களை முன்வைக்கவில்லை.

இது மிகவும் கவலைக்குரிய விடயமாகும் என்று பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச் சர் தி.மு.ஜயரத்ன தெரிவித்தார். சிறிலங்கா சுதந்திரக்கட்சி தீர்வு யோசனைகள் பெரும் பாலும் இவ்வாரம் சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவுக்கு சமர்ப்பிக்கப்படும் சாத்தியம் இருக் கிறது. ஜனாதிபதி நாடு திரும்பியதும் இது குறி த்து தீர்மானிக்கப்படும் என்றும் கூறினார்.

நாட்டின் தற்போதைய அரசியல் நிலை மை தொடர்பாக கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு கருத்துத் தெரிவித் (06 ஆம் பக்கம் பார்க்க)

## ஓய்வூதிய அலுவலர்களுக்கான தகுதிகாண் தடைப் பரீட்சை

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டச் செயலக மற்றும் யாழ். மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் ஓய்வூதிய அலுவலர்களின் தகுதிகாண் தடைப் பரீட்சைக்கு விண்ணப் பித்த அலுவலகர்களுக்கான தகுதிகாண் தடைப் பரீட்சை எதிர்வரும் 26 ஆம் திகதி சனிக்கிழமை யாழ்ப்பாண மாவட்டச் செய லகத்தில் நடைபெறவுள்ளது.

இது தொடர்பாக ஓய்வூதியத் திணைக் களப் பணிப்பாளர் யாழ்.மாவட்ட அரசாங்க அதிபருக்கு அறிவித்துள்ளார். இப்பரீட்சையில், காலை 10-12 மணிவரை தாபன நியதி யும் நிதிநிபந்தனை பரீட்சையும் பிற்பகல் 1-3 மணி வரை திணைக்களக் கட்டளைக ளும் நிபந்தனைகளும் பரீட்சையும் நடை பெறும் என அரச அதிபர் அறிவித்துள்ளார்.

அனுமதி அட்டைகளைப் பரீட்சார்த்திக ளுக்கு வழங்குமாறு யாழ்.அரச அதிபர் க. கணேஷுக்கு முன்னர் அறிவித்தல் விடுக் கப்பட்டுள்ள நிலையில் இதற்கான நடவடிக் கைகள் எடுக்கப்பட்டுள்ளது. (ச)

## சமய அறிவுப் போட்டி பரிசளிப்பு வைபவம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண மாநகராட்சி மன்ற சைவ சமய விவகாரக் குழுவினால் நடாத்தப்பட்ட சமய அறிவுப் போட்டி பரிசளிப்பு வைபவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

சைவ சமய விவகாரக் குழுத் தலைவரும் யாழ்.மாநகர சபை ஆணையாளருமான மு.செ.சரவணபவ தலைமையில் நடைபெ றும் இந் நிகழவில் முன்னாள் சைவ சமய விவகாரக் குழுவின் தலைவரும் மாநகர சபை ஆணையாளருமான சி.வி.கே.சிவ ஞானம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கின்றார்.

போட்டியில் பங்கு பற்றி முதல் மூன்று இடங்களையும் விசேட சித்திகளையும் பெற் றவர்களை விழாவில் கலந்து கொள்ளுமாறு சைவ சமய விவகாரக் குழு கேட்டுள்ளது. (ச)

## பாடசாலைகளின் விபரங்கள் கல்வி அமைச்சினால் திரட்டல்

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் உட்பட நாட்டின் அனைத்துப் பிரதேசங்களி லும் அமைந்துள்ள பாடசாலைகளின் உட் கட்டமைப்பு வசதிகள் தொடர்பான விபரங்க ளை கல்வி அமைச்சு திரட்டி வருகின்றது.

நாட்டின் 22 மாவட்டங்களில் 93 கல்வி வலயங்களைச் சேர்ந்த 9 ஆயிரத்து 727 பாடசாலைகளில் இந்த ஆய்வு நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகக் கல்வி அமைச்சின் தகவல் முகாமைத்துவ கல்விப் பணிப்பாளர் பி.என்.அய்லப்பெரும தெரி வித்தார்.

இதன் பிரகாரம் நாடளாவிய ரீதியில் 6 ஆயிரத்து 801 பாடசாலைகளுக்கு தற்போது மின்சாரம் வழங்கப்பட்டுள்ளதுடன் 2 ஆயி ரத்து 342 பாடசாலைகள் தொலைபேசி வசதிக ளுடன் இயங்குவதாகவும் அவர் தெரிவித்தார்.

அத்துடன் 6 ஆயிரத்து 435 பாடசாலை களில் நூலக வசதிகள் ஏற்படுத்தப்பட்டுள்ள துடன் ஆயிரத்து 523 பாடசாலைகளில் கணனி ஆய்வு கூட வசதிகளும் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

பாடசாலைகளில் எதிர்காலத்தில் மேற் கொள்ளப்பட வேண்டிய உட்கட்டமைப்பு வச திகள் தொடர்பாக திட்டமிடும் நோக்கத்துடன் இந்த ஆய்வு நடவடிக்கைகள் மேற்கொள் ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

## 10 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அடுத்த மாதம் நியமனம்

### கல்வி அமைச்சர் தெரிவிப்பு

பட்டதாரிகள் 10 ஆயிரம் பேரை அடுத்த மாதம் பணிகளில் சேர்த்துக் கொள்ளத் தீர் மானித்துள்ளதாகக் கல்வி அமைச்சர் சுசில் பிறேம ஜயந்த தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் உரையாற்றிய அவர் தேசிய பாடசாலைகளின் ஆசிரியர் வெற்றி டங்களுக்காக இப் பட்டதாரிகளில் ஆயிரத்து 507 பேர் நியமனம் பெறவுள்ளனர்.

பிரதேச பாடசாலைகளின் வெற்றிடங்க ளுக்காக 7 ஆயிரத்து 500 பேர் இணைத் துக் கொள்ளப்படவுள்ளனர். அத்துடன் தருண அருண திட்டத்தின் கீழ் பயிற்றப்பட்ட 2 ஆயி ரத்து 88 பேரை பாடசாலைகளில் அபிவி ருத்தி உதவியாளர்கள் என்ற பதவிகளுக்கு இணைத்துக் கொள்ளவுள்ளதாக அமைச்சர் சுசில் பிறேம ஜயந்த குறிப்பிட்டுள்ளார். (ச-3)

## அதிபர், கோட்டக் கல்வி அலுவலர் பதவிகளுக்கு விண்ணப்பம் கோரல்

கொக்குவில் இந்துக் கல்லூரி, பத்தை மேனி இரத்தினேஸ்வரி வித்தியாலயம், கொக்குவில் ஸ்தான சீ.சீ.த.க. பாடசாலை ஆகியவற்றுக்கு அதிபர் பதவிக்கு விண்ணப் பங்கள் கோரப்பட்டுள்ளன.

அத்துடன் யாழ்.கல்வி வலயத்தைச் சேர்ந்த இலங்கை ஆசிரியர் சேவை வகுப்பு I ஐச் சேர்ந்த முதுமாணிப் பட்டம் உள்ள வர் களிடமிருந்து யாழ்.கல்வி வலய அலுவ லக ஆசிரிய நிலைய முகாமையாளருக்கான விண்ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன.

இவற்றுக்கான விண்ணப்பப் படிவங்க ளைத் திட்டமிடல் பிரிவில் பெற்று எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் விண்ணப்பிக் குமாறு யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி.செல்வரத்தினம் அறிவித்துள்ளார்.

இதேவேளை இலங்கை அதிபர் சேவை I ஐச் சேர்ந்தவர்களிடமிருந்து கோப்பாய்க் கோட்ட கல்வி அலுவலர்களுக்கான விண் ணப்பங்களும் கோரப்பட்டுள்ளன. (ச)

## பேராசிரியர் வித்தியானந்தன் நினைவுப் பேருரை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல் லூரியில் பேராசிரியர் வித்தியானந்தன் நினைவுப் பேருரை பீடாதிபதி எஸ்.கே.யோக நாதன் தலைமையில் நாளை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறவுள்ளது.

'எமது பிரதேச சமகாலக் கல்விச் சவால் களும் தீர்வுகளும்' என்ற தலைப்பில் யாழ்ப் பாணப் பல்கலைக்கழக முன்னாள் துணை வேந்தர் பேராசிரியர் பொ.பாலசுந்தரம் பிள்ளை நினைவுப் பேருரையை ஆற்றவுள் ளார். (ச)

## நயினை பரமேஸ்வரக் குருக்கள் இந்தியாவில் இறையடி சேர்ந்தார்

(யாழ்ப்பாணம்)

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்பாள் ஆலய பரம்பரை பிரதம குருமணி சிவாகம கலாநிதி பிரம்மஸ்ரீ சுவாமிநாத பரமேஸ்வரக் குருக்கள் இந்தியாவில் அமரத்துவம் அடை ந்து விட்டார்.

இவர் இலங்கையில் மட்டுமல்லாது, சிங் கப்பூர், மலேசியா, லண்டன், ஜேர்மனி, சுவிஸ் லாந்து, கனடா போன்ற நாடுகளிலுள்ள சைவத் திருத்தலங்களுக்கும் சென்று கும்பாபிஷேகங்கள் செய்த பெருமைக்குரி யவர்.

சிவாலய கிரியைகள் பற்றிய அரிய நூல் களை எழுதியுள்ள இவரது இழப்பு சைவ உல கிற்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பாகும். (அ)

## கலாசாரப் பேரவையின் செயற்குழுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்ட கலாசாரப் பேரவையின் செயற்குழுக் கூட்டம் நாளை பிற்பகல் ஒரு மணிக்கு யாழ்.மாவட்ட செயலகத்தில் அரச அதிபர் க.கணேஷ் தலைமையில் நடை பெறும் என மேலதிக அரச அதிபர் ஆ.சிவ சுவாமி அறிவித்துள்ளார்.

இக் கூட்டத்தில் செயற்குழு உறுப்பினர் களை தவறாது கலந்து கொள்ளுமாறு கேட் கப்பட்டுள்ளது. (ச)

## பால் குடிப்பதன் மூலம் புகை பிடிப்பதை மறக்கலாம்

(கொழும்பு)

தொடர்ந்து பால் குடித்து வந்தால் புகை பிடிப்பதை மறக்க முடியும் என்று மருத்துவ விஞ்ஞானிகள் கூறியுள்ளனர். புகைபிடிக் கும் பழக்கம் ஒருவரை தொற்றிக் கொண் டால் அது அவரை எளிதில் விட்டுவிடுவது இல்லை.

புகைப்பிடிப்பதை மறக்கப் பல்வேறு யோசனைகள், வழிகள் கூறப்படுகின்றன. ஆனால் அவை ஒரு சாரார் விஷயத்தில் மட் டுமே பயன் அளிக்கின்றது.

இப்போது புகைப்பிடிப்பதை மறக்கப் புதிய வழியை மருத்துவ ஆராய்ச்சியாளர் கள் வெளியிட்டுள்ளனர். இதற்காக சிகரெட் பிடிக்கும் பழக்கம் உள்ள 209 பேரைத் தேர்ந்தெடுத்து அவர்களிடம் ஆராய்ச்சி நடத்தினர்.

சிகரெட் பிடிக்கும் ருசியை அதிகப்படுத் தும் உணவு, பானம் எனது? அதை வெறுக் கச் செய்யும் உணவு, பானம் எது? என்று அவர்களிடம் கேள்வி கேட்கப்பட்டது.

அதற்கு அவர்களில் 49 சதவீதம் பேர் பால், பாலாடை போன்ற பொருள்கள் சிக ரெட் ருசியை வெறுக்கச் செய்கின்றன என்று பதிலளித்தனர்.

14 சதவீதம் பேர் கோப்பி மணம் இல்லாத தண்ணீர், பழரசம் போன்றவை வெறுக்கச் செய்வதாகக் கூறினர். 16 சதவீதம் பேர் பழங் கள், காய்கறிகள் அந்த ருசியை வெறுக்கச் செய்வதாகத் தெரிவித்தனர்.

இந்த ஆய்வைக் கொண்டு குறிப்பிட்ட உணவு அல்லது பானத்தில் உள்ள எந்த க் கலவை புகைபிடிக்கும் ருசியை மாற்றுகிறது என்பதைக் கண்டுபிடித்தால் அதைக் கொண்டு புகைபிடிக்கும் பழக்கத்தை மறப்பதற்கான மருந்தைத் தயாரிக்க முடியும் என்று மருத் துவர்கள் கருதுகின்றார்கள். (ச)

## ஓமந்தைச் சோதனைச் சாவடியிலிருந்து செஞ்சிலுவைச் சங்கம் மீண்டும் வெளியேறியது

கடந்த 4 நாள்களாக மூடிக்கிடந்த பின் நேற்று முன்தினம் காலை திறக்கப்பட்ட ஓமந்தை இராணுவச் சோதனைச் சாவடிப் பகுதியில் நேற்று மாலை 4 மணியளவில் இடம்பெற்றதாகத் தெரிவிக்கப்படும் துப்பாக் கிப் பிரயோகச் சம்பவம் ஒன்றினையடுத்து அங்குப் பொதுப் போக்குவரத்துக் கண் காணிப்பு நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சர்வ தேச செஞ்சிலுவைக் குழுவினர் தமது பாது காப்புக்கு பாதிப்பு ஏற்பட்டுள்ளதாகத் தெரி வித்து அங்கிருந்து வெளியேறியுள்ளனர்.

இதனைத் தொடர்ந்து ஓமந்தை இராணு வச் சோதனைச் சாவடியூடான போக்குவரத் துக்கள் ஸ்தம்பிதம் அடைந்துள்ளன. ஓமந் தை இராணுவச் சோதனைச் சாவடி தொகு தியில் இராணுவத்தினரின் முன்னரங்கக் காவல் நிலைகளுக்கும் விடுதலைப்புலிக ளின் முன்னரங்கக் காவல் நிலைகளுக்கும் இடையில் உள்ள சூனியப் பிரதேசத்தில் சர்வ தேச செஞ்சிலுவைக் குழுவினர் வழமை யான தமது கடமையில் ஈடுபட்டிருந்த வேளை நேற்று மாலை 4 மணியளவில் வடக் குப் பக்கமாக விடுதலைப்புலிகளின் கட்டுப் பாட்டுப் பகுதியிலிருந்து ஏ-9 வீதி வழியாக இலக்கத் தகடில்லாத வாகனம் ஒன்று வேக மாக வந்ததாகவும் அதனை நோக்கி விடுத லைப்புலிகள் பக்கம் இருந்து துப்பாக்கிப் பிர யோகம் செய்யப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவத்தில் அங்கு நின்றிருந்த சர்வ தேச செஞ்சிலுவைக் குழுவினரது வாகனம் ஒன்று சிறு சேதங்களுக்கு உள்ளாகியதாக வும் அப்போது சர்வதேச செஞ்சிலுவைக் குழு வாகனத்தின் உள்ளே அலுவலர் ஒருவர் இருந்ததாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இச் சம்பவத்தின் மூலம் தமது பாதுகாப் புக்கு உத்தரவாதம் அற்ற நிலை ஏற்பட்டதா கத் தெரிவித்து சர்வதேச செஞ்சிலுவைக் குழுவினர் தமது அலுவலகத்திற்குத் திரும் பியதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ச-3,5)

## அதிகரித்துள்ள இனப்பாகுபாட்டை இலங்கை மக்கள் உணரத் தவறிவிட்டனர்

### பேராசிரியர் அமர்த்யா சென் விளக்கம்

(ஒஸ்லோ)

அதிகரித்துள்ள இனப்பாகுபாட்டை இலங் கை மக்கள் உணரத் தவறிவிட்டனர். இந்த நாட்டின் மக்கள் அமைதி முயற்சிகளுக்கு தமது பங்களிப்பை நல்க வேண்டும் என்று நோபல் பரிசு பெற்ற பேராசிரியர் அமர்த்யா சென் தெரிவித்துள்ளார்.

நோர்வே ஒஸ்லோவில் நடைபெற்ற விரி வுரை ஒன்றின் போதான கேள்வி ஒன்றுக்கு அவர் அளித்த பதில் ஒன்றிலேயே இதுதெரி விக்கப்பட்டது. இலங்கையில் இலவசக் கல்வி இலவச மருத்துவம் போன்ற நல்ல திட்டங்க ளை நடைமுறைப்படுத்தியிருந்தது. எனவே இந்த நாட்டின் மக்கள் அமைதி முயற்சிகளி லும் தமது பங்களிப்பை வழங்க வேண்டும்.

ஆனால் புத்தமதம், சிங்கள இனம் போன் றவற்றை முதன்மைப்படுத்துவதால் அதன் தேசிய அடையாளப்படுத்தலிலிருந்து மற் றையச் சமூகங்கள் வேறுபட்டுள்ளன என் றார் அவர். (ச-5)

## தேர்தல் மறுசீரமைப்புச் சட்ட மூலம் சிறுபான்மைக் கட்சிகளால் நிராகரிப்பு

முன்மொழியப்பட்டுள்ள தேர் தல் மறுசீரமைப்புச் சட்ட மூலத்தை சிறுபான்மைக் கட்சிகள் நிராகரித் துள்ளன. நாடாளுமன்றக் கட்டடத் தில் நேற்று நடைபெற்ற தேர்தல் மறுசீரமைப்புத் தொடர்பான நாடா ளுமன்றத் தெரிவுக் குழுவின் கூட் டத்தில் இம் முன்மொழிவுகளை சிறுபான்மைக் கட்சிகள் நிராகரித் துள்ளன.

மறுசீரமைப்பு முன்மொழிவுக ளின்படி 150 பேர் தொகுதி முறை யின் அடிப்படையில் நாடாளுமன் றத்திற்குத் தெரிவு செய்யப்படுவர். மீதி 75 பேர் தேசிய பட்டியல் மூலம் தெரிவு செய்யப்படுவர் எனத் தெரி விக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் குறித்த முன் மொழிவுகள் தமது சிறுபான்மை அங்கத்துவத்தினைப் பாதிக்கும் என தமிழ், முஸ்லிம் கட்சிகள் தெரி வித்துள்ளன.

இம் முன்மொழிவுகளில் திருப் தியடையவில்லை எனக் குறிப் பிட்ட ஜே.வி.பி.தனது கட்சி, தேர்தல் மறுசீரமைப்புத் தொடர்பான புதிய யோசனை ஒன்றை முன்வைக் கும் என குறிப்பிட்டுள்ளது. (ச-3)





KU BAND டிஸ் அன்ரனா சிஸ்டம் உத்தரவாதத்துடன் Rs.9000/=ல் இருந்து

SATS - TECH 7- வது ஆண்டில்...

இதோ! விரல் நுனியில் உலகை உங்கள் வசம் தருகின்றோம்.சாதா ரண டீவி அன்ரனாவை பொருத்தும்விலைக்கு அண்மையாக சன் டீவி/சன் நியூஸ்/ஜெயா டீவி/பொதிகை, DD Sports, Head Lines Today, DD 1 உட்பட்ட 44 சனல்கள் Digital DVD தரத்துடன் மாதாந்த கட்டணம் எதுவுமின்றி கண்டு களிக்கலாம்.

உத்தரவாதம் நிபந்தனைக்கு உட்பட்டது

மேலதிக விபரங்களுக்கு:-
SATS-TECH ENGINEERS
இல.182, கே.கே.எஸ். வீதி,
குளப்பிட்டி சேச் அருகில்,
கொக்குவில்,
யாழ்ப்பாணம்.

Phone:-
(021)222 5908
Hot Line
0777 710785

(c-103)

# அம்பலமாகிறது

'மயக்கம்' வந்தாலும் ஆச்சரியம் இல்லை ஆயினும் மயங்காமல் இருப்பதே புத்தி பூர்வமானது.

இலங்கைக்கான முன்னாள் அமெரிக்கத் தூதர் ஜெஸ்ரி லன்ஸ்டெட் கூறிய, காலங் கடந்த ஞானத் துளிகள், தமிழ் மக்களிற்கான மயக்க மருந்து வடிவில் வெளிவந்துள்ளது.

இந்த 'முன்னாள்'கள் எல்லோரும் இப்படித்தான் பேசுகிறார்கள். இந்திய 'முன்னாள்'களும் இதற்கு விதிவிலக்கல்ல. சுருட்டு அணைய முன் வேரறுக்கப்படும் என்று பிரகடனம் செய்த இந்திய அறிஞர் பின்னாளில் யார்த்தவாதியாக மாறியதும் வரலாறு தான்.

'முன்னாள்'களின் இராஜதந்திர உத்திகள் காலப்போக்கில் பழுதடைந்து, பின்னாளில் சமரச உத்திகளை முன்னெடுப்பதனை இன்னாளில் தரிசிகின்றோம்.

வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலில் தமிழீழ விடுதலைப்புலிகளை சட்டரீதியாக இணைத்த அமெரிக்க குடியரசு, விடுதலைப் புலிகளுடன் நேரடித் தொடர்புகளை ஏற்படுத்துவதில்லையென்பதில் கொள்கையளவில் மேற்கொள்ளப்பட்டதே தவிர சட்டபூர்வமான தடையல்லவென்று புதுவியாக்கியானம் வழங்குகிறது.

மயக்கம் தரும் குழப்பகரமான வார்த்தை ஜாலத்தை லன்ஸ்டெட் வெளியிட்டுள்ளார். பயங்கரவாத அமைப்புக்களின் பட்டியலிலிருந்து சட்டபூர்வமாக விடுதலைப் புலிகள் இயக்கத்தை நீக்கினால் இவ்வாறான சட்ட குழப்பங்கள் லன்ஸ்டெட்டிற்கு ஏற்படாது. கொள்கையளவிலும் புலிகளின் பிரநிதிகளை சந்திப்பதற்கு தடையாகவிருப்பது. இது காலவரை எதுவாகவிருந்ததென்பது அவருக்கு நன்றாகப் புரியும்.

பேச்சுவார்த்தைக்கு அனுசரணையாகவிருந்த ஐரோப்பிய யூனியன், பேசும் போதே புலிகளுக்கு தடைவிதித்ததால் போர் நிறுத்த கண்காணிப்புக் குழுவிலிருந்து யூனியன் பிரதிநிதிகள் வெளியேற்றப்பட்டார்கள். இதுவும் 'கொள்கையளவில்' புலிகளால் மேற்கொள்ளப்பட்ட விடயம் தான்.

தடை விதித்தபடி பேசலாம் என்கிற அரசியல் நாகரிகம் மேற்குலகின் ஜனநாயக வரலாற்றிற்கு பொருத்தமானதாகவிருந்தாலும் விடுதலைக்கான போராட்டத்தை மலினப்படுத்தும் சக்திகளோடு உறவாட மக்கள் விரும்பமாட்டார்கள்.

அரசு மேற்கொள்ளும் வான் வெளித்தாக்குதல்களும், கிழக்கு மண்ணை கைப்பற்றும் நகர்வுகளும் விடுதலைப்புலிகளை அழித்துவிடுமென கற்பிதம் கொண்ட மேற்குலக சிந்தனை, வான்புலிகளின் வரவோடு தடுமாற்மடைவதையே 'லன்ஸ்டெட்டின்' விமர்சனம் வெளிப்படுத்துகிறது. இந்திய நகர்வுகளால் உருவான பதற்றமே புலிகளை நோக்கிய 'வாய்க்கால்' வெட்டும் பணி. புதுவெள்ளப் பாய்ச்சலிற்கு தயார்ப்படுத்தப்படுகிறது.

இந்தியாவின் கடும்போக்கு அதிகரிக்கும் இவ்வேளையில், இடுக்கினுள் புகுந்து இன்னுமொரு பாலஸ்தீனப் பிரதியாக்க வடிவத்தை தளத்தினில் விரித்துவிட அமெரிக்க முனை

வதாகவே கருத இடம் உண்டு.

உள்நுழைய அனுமதித்து, சிக்குண்டு கரையொதுங்கிய போது, அரபாத்தை வெள்ளை மாளிகைக்கு அழைத்து இஸ்ரேலுடன் கைகுலுக்கச் செய்து இறுதியில் நட்டாற்றில் விட்ட அமெரிக்க புராணம், இராமாயணத்தை விட சுவாரசியமான சோகக் கதை.

இந்த அமெரிக்க பருப்பு, வன்னிக்களத்தில் வேகுமா? இல்லையா? என்பதை சொல்லாமலே புரிந்து கொள்ளலாம். மக்களால் ஜனநாயக வழியில் தெரிவு செய்யப்பட்

திருமலை துறைமுகத்தை இந்தியாவிற்கு விட்டுக்கொடுக்கலாம் என்ற தோரணையில் அமைகிறது அமெரிக்க தத்துவம்.

சீனாவின் அபரிமிதமான வளர்ச்சியே இவ்வாறான தத்துவங்களை அமெரிக்க வாயூடாக உதிர்க்க வைக்கிறது. சீனாவை கண்காணிக்க சிங்கப்பூர் போதும் என்பதே சொல்லப்படாத செய்தி. தென் ஆசியாவின் கடல்வழி தலைவாசல் பாதையில் திருமலைத்துறைமுகம் இல்லை என்பதையும் தூதுவர் முன்



அதாவது முழு தென் ஆசியப் பிராந்தியத்திற்கான கேந்திர முக்கிய நகர்வுகளை தீர்மானிக்கும் அசைவியக்க சக்தி மையம் (Pivotal Force) இலங்கை என்பதே

ஆண்டு உதயன், விஜயன் என்பவர்களால் எழுதப்பட்ட 'இந்து மகா சமுத்திரமும் இலங்கை இனப்பிரச்சினையும்' என்ற நூலில் இது பற்றி விரிவாக ஆராயப்பட்டிருந்தது.

ஆயினும் இந்தியாவை மையமிட்டுஈழ விடுதலை பற்றிய கருத்தாடல்கள் மட்டுப்படுத்தப்பட்ட நிலையில் அமெரிக்க நலன் குறித்து அக்கறை கொள்ளாமல் அதீத கற்பனை என்கிற நகையாடலுடன் புறந்தள்ளப்பட்ட காலமும் உண்டு.

தற்போதைய போராட்ட வளர்ச்சியின் உச்சக்கட்ட நிலையில் முன்பு கற்பனையாக உருவாக்கப்பட்ட புறச் சக்திகளின் நிஜமுகங்கள் நிதர்சனமாவதை இன்று காண்கின்றோம். இலங்கைத் தமிழர்களுக்கு சட்ட பூர்வ நியாயப்பாடுக

# அமெரிக்க சித்தாந்தம்

இறையாண்மையுள்ள இலங்கை அரசு, தம்மிடம் இருந்து உதவி

**அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பிற்கு தென்ஆசிய பிராந்தியத்தில் அமைதியும் பாதுகாப்பான சூழ்நிலையும் நிலவ வேண்டுமெனவும், அதற்கு தமிழீழ விடுதலைப்புலிகள் அச்சுறுத்தலாக அமைவதாக அமெரிக்க சிந்தனை வெளிப்படுத்துகிறது.**

பெறுவதற்குரிய உரித்துக் கொண்டதென அமெரிக்க தத்துவம் கூறுகிறது.

ஆனாலும் மக்களால் தெரிவு செய்யப்பட்ட, தம்மால் பயங்கரவாத இயக்கமாக குறி சுடப்பட்ட 'ஹமாஸ்' இயக்கத்திற்கு அந்த உரிமையை வழங்க இந்த அமெரிக்க தத்துவம் மறுக்கிறது.

அமெரிக்காவின் 'சுய விமர்சனம்' எப்போதுமே மயக்கமானது தான். தன்னால் இறக்குமதி செய்யப்பட்ட ஜனநாயகத்தை மட்டுமே ஈராக்கில் அங்கீகரிக்கும்.

பெரும்பான்மை இன மக்களின் அரசியல் அபிலாஷைகளை 'ஜனநாயக' முறைமையின் ரிஷி மூலமாகக் கொண்டால் வட அயர்லாந்து பிரச்சினைக்குத் தீர்வு காண அமெரிக்கா, பிரித்தானிய மத்தியஸ்தம் தேவைப்பட்டிருக்காது.

தொலைக்காட்சிகளில் பல காலமாக ஊமையாக்கப்பட்ட வட அயர்லாந்து சின்பெயின் கட்சியின் தலைவர் ஜெரி அடம்ஸை குரலிழந்த விடுதலைப் போராளியாக ஆக்கியதும் இந்த ஜனநாயகங்கள் தான்.

வடக்கு கிழக்கு தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட இலங்கை அரச தலைவரை முழு நாட்டிற்குமான தேர்ந்தெடுக்கப்பட்ட மனிதராகக் கற்பிதம் கொள்வது அமெரிக்காவிற்கு தோதாகவிருக்கும்.

இவ்வகையான ஜனநாயக விற்பன்னர்கள், வான்வெளி அடியோடு புது நகர்வினை மேற்கொள்வது புதினமானதொன்றல்ல. திருமலை துறைமுகத்தில் கேந்திர முக்கியத்துவத்தை விட சிங்கப்பூரை முக்கிய மையமாகக் கருதுவதாகக் கூறி இந்தியாவை சாந்தப்படுத்த முனைகிறார் முன்னாள் அமெரிக்கத் தூதர்.

இந்தியா, கச்சதீவை இலங்கைக்கு விட்டுக்கொடுத்தது போன்று,

வைக்கிறார். நீண்ட காலத்திற்கு முழு தென் ஆசியாவிற்கும் எண்ணெய் விநியோகத்தை செய்யக்கூடிய நிலத்தடி சேமிப்புக் குதங்கள், துறைமுகத்தை அண்டிய சீனன்குடாவில் இருப்பதை மிக இலகுவாக மறைத்துவிட்டார். இனி வரும் சுய விமர்சனங்களில் சீனக்குடாவும் வரும்.

மன்னார் கடல் படுக்கையில் உள்ள எண்ணெய் வளமும் வரலாம் எம்மவருக்குத் தெரியாததாயினும் இவர்களுக்குப் புரிந்து இந்து சமுத்திரம் பிராந்தியம் குறித்த ஆழமான கருத்து நிலையொன்று உண்டு.

அக் கருத்துருவமாகும். அம்மையத்தில் பிறிதொரு சக்தி, விடுதலைப் புலிகளாகவோ அல்லது வேறெதுவாகவோ இருந்தாலும் அதைப் பிராந்திய நலன்விரும்பிகளால் ஜீரணிக்க முடியாது என்பதே யதார்த் தமாகும்.

ஆள் மனத்தூக்கம் கலைந்து தமது உள் மனக் கிடக்கையினை தெளிவாக முன்வைக்கிறார் லன்ஸ்டெட். அதாவது அமெரிக்காவின் தேசிய பாதுகாப்பிற்கு தென் ஆசிய பிராந்தியத்தில் அமைதியும் பாதுகாப்பான சூழ்நிலையும் நிலவ வேண்டுமெனவும் அதற்கு தமிழீழ விடுதலைப் புலிகள் அச்சுறுத்தலாக அமைவதாக அமெரிக்க சிந்தனை வெளிப்படுத்துகிறது.

ஈழப் போராட்ட ஆரம்ப காலங்களில் இந்த மையச் சக்தி குறித்த கருத்து நிலை முன்வைக்கப்பட்ட போது கவனத்தில் கொள்ளப்படாததொரு நிலமை பரவலாகக் காணப்பட்டது. இருப்பினும் 1987ஆம்

ளுக்கு உட்பட்ட சோகங்கள் உண்டென்று அமெரிக்கா அங்கீகரிப்பதாக முன்னாள் தூதுவர் கூறுகிறார்.

ஆயினும் போராடித்தான் அதைப் போக்க வேண்டும் என்கிற வழிமுறைகளையும் சிந்தனையையும் நிராகரிக்கிறார். ஏனெனில், ஆயுதப்போராட்டமும் சுய நிர்ணய உரிமைக்கோட்பாடும் அமெரிக்க தேச நலனுக்கு அச்சுறுத்தலாக அமைகிறது என்பதை பகிரங்கமாக கூறவேண்டிய நிர்ப்பந்தத்திற்கு உள்ளாகியுள்ளார்.

உனது துன்பங்களை நான்

நன்றி—வீரகேசரி

உணர்கின்றேன். உனக்கான உரிமைகளையும் அங்கீகரிக்கின்றேன். ஆனாலும் போராடாதே. எனது தேசியப் பாதுகாப்பிற்கு அப்போராட்டம் ஆபத்தாக அமையும் இது தான் அமெரிக்க தத்துவம்.


## ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம்
IPDT
## Institution of Professional Development for Teachers

## பாடசாலை ஆதார முகாமைத்துவ டிப்ளோமா
### Dip. in School Based Management

சமகால - எதிர்கால கல்விச் சவால்களை வெற்றிகரமாக எம் மாணவர்கள் எதிர்கொள்வதற்கு எம் பாடசாலைகளை ஆதாரமாகக் கொண்ட செயற்றிறன் வாய்ந்த அர்ப்பணிப்புள்ள கல்வி முகாமையாளர்களை உருவாக்கும் நோக்கில், பாடசாலை அதிபர்கள், உப அதிபர்கள், பகுதித் தலைவர்கள், இணைப்பாளர்கள், பாடசாலை முகாமைத்துவத்திற்கு உயிர்கொடுத்து தம்மை அர்ப்பணிக்கத் தயாராகவுள்ள ஆசிரியர்கள் இப் பாடநெறிக்கு விண்ணப்பிக்க முடியும்.

- கலைத்திட்ட - இணைக்கலைத்திட்ட முகாமை
- நிதி - வள முகாமை
- நெருக்கடி - அனர்த்த முகாமை
- கல்வி தொழில் வழிகாட்டல் முகாமை
- கல்வியியல் சட்டங்கள்
- பாடசாலையும் சமூக இயைபாக்கமும்
- புத்தாக்க முகாமை
- முரண்பாடுகளை முகாமை செய்தல்
- ஆரம்பக்கல்வி முகாமை
- விசேட தேவை - பிரச்சினைக்குரிய மாணவர் முகாமை

ஆகிய உள்ளடங்கிய பாடசாலையை ஆதாரமாகக் கொண்ட நவீன - பரந்துபட்ட முகாமைத்துவ அம்சங்களைக் கொண்ட; களவேலைகள், குழுச்செயல்முறைகள், செயற்றிட்டம், சுயகற்றல், சமர்ப்பிப்புக்கள், பேட்டிகள், விடய ஆய்வுகள், செயல்நிலை ஆய்வுகள், கல்விச் சுற்றுலாக்கள் என சர்வதேச கல்வி நிறுவகத்தின் தர நிர்ணயங்களுக்கு ஒப்பான கற்றல் முறைகள் பிரயோகிக்கப்படும்.

இப்பாடநெறியில் அதிபர் கல்வி நிர்வாக சேவை பதவி உயர்வு - பரீட்சை - தடை தாண்டல், ஆசிரிய ஆலோசகர் சேவை தெரிவுப்பரீட்சை, ஆசிரியசேவைப் பரீட்சை, பதவியுயர்வுகள் என்பவற்றின் பாட உள்ளடக்கங்களும் இணைக்கப்பட்டுள்ளன.

பாடசாலை அதிபர்களினதும் கல்வி முகாமையாளர்களாக வர ஆர்வமுள்ள ஆசிரியர்களினதும் வாண்மையை அரச சார்பற்ற ரீதியில், தொடருறு கல்வி மூலம் இந்த ஒரு வருட டிப்ளோமா பாடநெறி விருத்தியாக்கி பயில்வோரின் நடத்தைகள் மாற்றி வினைத்திறனாக்கும்.

இப் பாட நெறியைப் பயில விரும்புவோர் சுயமாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் படிவத்தை நிரப்பி (இதில் கஷ்டப் பிரதேச வெளிமாவட்ட சேவை, வசதிகளற்ற பாடசாலைகளில் சேவை, கல்வி முகாமைத்துவத்தில் ஆர்வம் தொடர்பான விடயங்கள் குறிக்கப்பட்டிருக்க வேண்டும்) 20.06.2007 ஆம் திகதிக்கு முன்னர், பதிவாளர், ஆசிரிய வாண்மை விருத்தி நிறுவகம், இல.226, (ஆனந்தா அச்சகம்), கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கு சாதாரண தபாலில் அனுப்பி வைக்கவும்.

### நிபுணத்துவ ஆலோசகர்கள்

1. பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
முன்னாள் துணைவேந்தர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
2. திரு. S.K. யோகநாதன்
பீடாதிபதி, யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி.

### இணைப்பாளர்

பா.தனபாலன்
B.A.(Cey) PGDE (merit),
Dip. in Psy (1st Class), M.Phil in Education,
Cert. in Vocational Guid (Singapore).

(C-078)



## விழிப்புணர்வுக் கருத்தரங்கு

கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் சொலிடார் நிறுவனத்தின் ஆதரவுடன் 23.05.2007 அன்று மாலை 2 மணிக்கு நீர்வேலி பூதர்மடம் பொதுச் சுகாதார நிலையத்தில் குடும்ப வன்முறை, பாலியல் வன்முறை, பாலியல் துஷ்பிரயோகம் தொடர்பான விழிப்புணர்வுக் கருத்தரங்கு நடைபெறவுள்ளது.

இதேபோன்ற விழிப்புணர்வுக் கருத்தரங்குகள் பொக்கன, புத்தூர், வாதரவத்தை, அச்செழு மற்றும் பன்னாலை ஆகிய இடங்களில் ஏற்கனவே நடைபெற்றுள்ளது என்றும் மேலும் பத்துக் கிராமங்களில் நடைபெறவுள்ளதாக டாக்டர் சி.ஜமுனாநந்தா தெரிவித்துள்ளார். (அ)

# இன்று ஒரு தகவல்

## அம்புலன்ஸ்!

ஒரு சாலையில் போக்குவரத்து நெரிசல். ஒருவர் அடிபட்டுக்கிடக்கிறார். கூட்டத்திலே ஒருவர் கத்திருக்கிறார்... "உடனே அம்புலன்ஸுக்குப் ஃபோன் பண்ணுங்க" என்று.

கொஞ்சநேரத்திலே அம்புலன்ஸ் வருகிறது. அடிபட்டவரைக் கொண்டுபோய் ஆஸ்பத்திரியிலே சேர்க்கிறது... அங்கே அவசர வைத்தியம். அடிபட்டவர் பிழைத்துக் கொள்கிறார்.

அம்புலன்ஸ் வசதி இல்லையென்றால் அவரை அவ்வளவு சீக்கிரத்தில் ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக முடியுமா?

ஆபத்துக்கு உதவுகிற நண்பர் மாதிரி இந்த அம்புலன்ஸ்!

அந்தக் காலத்திலே போர்கள் அதிகம் . அதிலே அடிபடுகிறவர்களும் அதிகம். அடிபட்டுக் கிடக்கிற போர் வீரர்களை அவசரமாக மருத்துவரிடம் கொண்டுபோக வேண்டும்! எப்படிக் கொண்டு போவது?...

ஒரு கனமான துணியை தூளி மாதிரிக் கட்டுவார்கள்- குழந்தைகளைத் தூங்க வைப்பதற்குத் துணியிலே தொட்டில் கட்டுகிறோமே அது மாதிரி! அந்தத் தூளியிலே அடிபட்டவர்களைப் படுக்கவைப்பார்கள்... அப்படியே தூக்கிக் கொண்டு போவார்கள். அப்புறம் தான் மருத்துவ சிகிச்சை!

இதிலேயுள்ள சிரமம் அடிபட்டவர்களை அவசரமாகக் கொண்டுபோய்ச் சேர்க்கமுடியாது... அதனாலேயே பாதி வழியிலேயே பரலோகம் போகிறவர்கள் தொகை அதிகம்.

சீக்கிரமாக அவர்களைக் கொண்டுபோய்ச் சேர்ப்பதற்கு என்ன வழியென்று யோசனை செய்தார்கள்... குதிரை மேலே ஏற்றிக்கொண்டு போனால் என்ன என்று ஒரு யோசனை வந்தது. அது மாதிரிச் செய்து பார்த்தார்கள். அது இன்னமும் ஆபத்தாகப் போய்விட்டது.

குதிரை ஓடுகிற வேகத்துக்கும்... குலுக்கலுக்கும் அடிபட்டுக் கிடப்பவனாலே ஈடுகொடுக்க முடியவில்லை. அலுங்காமல் குலுங்காமல் கொண்டுபோக வேண்டிய நிலைமை.

சரி... குதிரை முதுகிலே அவனைக் கொண்டு போக வேண்டாம்... குதிரை வண்டியிலே கொண்டு போனால் என்ன? நாலு சக்கரம் உள்ள குதிரை வண்டிகளை உபயோகப்படுத்த ஆரம்பித்தார்கள். 1487இலே இது பழக்கத்துக்கு வந்தது. 1792வரை இந்த முறை நீடித்தது.

பேரன் டொமினிக் என்ற ஒரு பிரெஞ்ச் மருத்துவர். அவர் குதிரை வண்டியிலே படுக்கை வசதியை ஏற்படுத்தினார். முதலுதவி செய்வதற்குத் தேவையானதையெல்லாம் அதிலே வைத்தார்.எங்கேயாவது ஒருவர் காயப்பட்டிருக்கிறார் என்று தெரிந்தால் அங்கே போய் வேண்டிய உதவிகளைச் செய்தார். தன்னார்வத் தொண்டர்களையும் இந்தப் பணியிலே அவர் ஈடுபடுத்தினாராம்.

1864 இல் ஜெனீவா ஒப்பந்தம் ஏற்பட்டதல்லவா? அப்பொழுதுதான் அம்புலன்ஸ் சேவைக்கு மோட்டார் வாகனங்களையும் பயன்படுத்தலாமென்று முடிவுசெய்தார்கள்.

அந்தச் சமயத்திலே இன்னொரு விதமான அம்புலன்ஸ் சேவையும் நடந்தது. இராட்சத பலூன்களை அம்புலன்ஸ் ஆகப் பயன்படுத்தியிருக்கிறார்கள்.

முதன் முறையாக 1930இல் தான் அமெரிக்காவிலே ஒரு முழுமையான அம்புலன்ஸ் வாகனம் நடமாட ஆரம்பித்திருக்கிறது. அதாவது, அதிலே ஒக்ஸிசன் சிலிண்டர் இருக்கும் 'டிரிப்ஸ்' போன்ற அவசரத் தேவை உபகரணங்கள் இருக்கும் ... ஒரு மருத்துவர் இருப்பார். ஒரு நர்ஸ் இருப்பார்.

இப்படிப்பட்ட ஒரு அம்புலன்ஸ் வசதி வந்தபின் தான் பல உயிர்களைக் காப்பாற்றக்கூடிய ஒரு நல்ல வாய்ப்பு ஏற்பட்டது. இப்பொழுது இந்த அம்புலன்ஸ் சேவை எவ்வளவோ முன்னேற்றம் கண்டிருக்கிறது. மோட்டார் வாகனங்கள் மட்டுமல்ல.... படகு,ஹெலிகாப்டர், விமனங்கள் எல்லாம் கூட இந்தப் பணிக்கு மிகவும் உபயோகமாக இருக்கிறது.

ஆபத்திலே இருக்கிற ஒரு மனிதனைப் பார்த்து விட்டால் உடனே அவனைக் காப்பாற்ற வேண்டும் என்கிற எண்ணம் இன்னொரு மனிதனுக்கு ஏற்படத்தான் செய்யும். அடிபட்டுக் கிடக்கிற ஒருத்தனைப் பார்த்தவுடனே அம்புலன்ஸுக்கு ஃபோன் பண்ணத்தான் ஓடுவோம்.

ஓர் ஆள்... அடிபட்டு விழுந்தான்... அதைப் பார்த்தவுடனே ஒருத்தன் அவசரமாக ஓடினான். கொஞ்ச நேரத்திலே இன்னொருவனைக் கூட்டிக் கொண்டு அந்த இடத்துக்கு வந்தான்.

"யார் அது? உனக்குத் தெரிந்த டாக்டரா?..." என்று கேட்டார்கள். "இல்லை... இவன் என் கூடப் பிறந்த தம்பி... விபத்து என்றால் எப்படியிருக்கும் என்று ரொம்ப நாளாகக கேட்டுக் கொண்டிருந்தான்... நேரிலே பார்க்க வேண்டுமென்று ஆசைப்பட்டான்.. அது தான் ஓடிப்போய் அவனைக கூட்டிக்கொண்டு வந்தேன" என்றான் அவன்.

தென்கச்சி கோ.சுவாமிநாதன்

# ஜோர்தானில் தஞ்சமடைந்துள்ள 65 பேரையும் இலங்கைக்கு திருப்பியனுப்ப அரசு தீர்மானம்

## ஜனாதிபதி நடத்திய பேச்சுவார்த்தையில் இணக்கம்

தொழில் நிமித்தம் ஜோர்தானுக்கு சென்று பல்வேறு நெருக்கடிகளுக்கு முகம் கொடுத்து அந்நாட்டில் தஞ்சமடைந்துள்ள இலங்கையர்களுக்கு பொது மன்னிப்பு வழங்கி இலங்கைக்கு திருப்பியனுப்புவதற்கு ஜோர்தான் அரசாங்கம் தீர்மானித்துள்ளது. ஜோர்தானில் நடைபெற்ற ஜி–11 மாநாட்டில் கலந்து கொண்ட ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாநாட்டின் முடிவில் ஜோர்தான் அரசாங்கத்தின் முக்கியஸ்தர்களுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போதே இந்த இணக்கம் காணப்பட்டது. ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ ஜோர்தான் மன்னர் அப்துல்லா அல் ஹுசைனுடன் நடத்திய பேச்சுவார்த்தையின் போதே இவ்விணக்கம் காணப்பட்டுள்ளது என்று ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

ஜோர்தானில் தஞ்சமடைந்துள்ள இலங்கையர்கள் 65 பேரை மீண்டும் இலங்கைக்கு திருப்பி அனுப்புவதற்கு ஒருவருக்கு தலா ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபா தண்டப்பணம் அறவிடுவதற்கு தீர் மானிக்கப்பட்டதாகவும் அந்தப் பணத்தை செலுத்த முடியாது இலங்கை அகதிகள் நாட்டில் தஞ்சமடைந்துள்ளதாக ஜோர்தான் அரசாங்கம் ஜனாதிபதியிடம் தெரிவித்துள்ளது.

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ விடுத்த வேண்டுகோளை அடுத்து ஜோர்தான் மன்னர் அவர்களுக்கு பொது மன்னிப்பு வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளார். ஜோர்தானில் தஞ்சமடைந்துள்ள இலங்கை அகதிகள் பொது மன்னிப்பு வழங்கப்பட்ட காலத்தில் தண்டப்பணம் செலுத்தாது இலங்கைக்கு திரும்புவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளுக்குச் செல்கின்ற போது அந் நாட்டின் சட்டதிட்டங்கள் மற்றும் குடிவரவு, குடியகல்வு தொடர்பான அடிப்படை அறிவைப் பெற்றிருக்காததன் காரணமாகவே இவ்வாறு தஞ்சமடைய வேண்டியுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ-5)

# இந்து தர்மாசிரியர் பரீட்சை – 2007

(யாழ்ப்பாணம்)

பரீட்சை ஆணையாளரால் இந்து தர்மாசிரியர் பரீட்சைக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

விண்ணப்பப்படிவங்கள் , பரீட்சை ஆணையாளர் நாயகம் ஒழுங்கமைப்பு வெளிநாட்டுப் பரீட்சைகள் கிளை, தேசிய மதிப்பிடலுக்கும் பரீட்சித்தலுக்குமான சேவை, இலங்கை பரீட்சைத் திணைக்களம், பெலவத்தை , பத்தர முல்லை என்னும் விலாசத்திற்கு இம்மாதம் 28ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக பதிவுத் தபாலில் அனுப்பப்படல் வேண்டும்.

இப் பரீட்சைக்கு தனிப்பட்ட முறையில் தோற்ற இடமளிக்கப்படமாட்டாது என்பதும் அறநெறிப் பாடசாலை மூலமாகவே விண்ணப்பிக்க முடியும் என்பதும் கவனிக்கத்தக்கது. (அ-5)

# ஆங்கில ஆசிரியர்களுக்கான டிப்ளோமா பரீட்சை -2004

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகம் ஆங்கில ஆசிரியர்களுக்கான ஆங்கில டிப்ளோமா பரீட்சை– 2004 பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன. சித்திபெற்றவர்களின் பெயர்கள் வருமாறு ,

### விசேட சித்தி

திருமதி ஜெ.உமா .

### திறமைச் சித்தி

திருமதி பி. அருட்செல்வி, பி.கணேசன் , ஜெ. ஜோர்ச் ஜெயபாலன் , செல்வி வி. ஜெயந்தி , திருமதி ரீ. கலாவல்லி, திருமதி வை. கார்த்தியாயனி , ஆர்.சண்முகசுந்தரம் , எஸ். சிவகுமார், திருமதி பி. சிவசக்தி , செல்வி எஸ். ஸ்ரீரதி , திருமதி ஜெ. சுயாதினி , பி. சுதர்சன், ஐ.தவரட்ணம், செல்வி எஸ்.திரிவேணி திரிலோசினி , திருமதி பி. விமலேஸ்வரி.

### சித்தி

செல்வி கே.அகிலவல்லி, எ.அருள்நேசன், திருமதி பி. பாலேஸ்வரி, செல்வி கே.தேவரதி , செல்வி எஸ்.தயாளினி, திருமதி ஜெ.பொலிசிற்றா ரமணி, திருமதி எஸ்.ஜெயசிந்தாஞானம் , எஸ்.ஜெயகுமார் , எஸ் .ஜோசப் அனுரா, ஜீ.ஐஸ்ரின்மேரி , ரி. கபிலநாதன், எஸ்.கருணாகரன் .

கே. குகேந்திரன் , கே.லோகரஞ்சன் , வீ.மகாதேவன் , செல்வி என்.மஞ்சுளா , செல்வி ரீ.மஞ்சுளா, திருமதி யு. மங்களவதனி , சகோதரி எம்.மரிஸ் ரெலா , எஸ். முருகமூர்த்தி , கே. நரேந்திரன் , திருமதி கே.நயனாவதி , திருமதி எஸ். நிர்மலாராணி , செல்வி ஆர்.பற்றீசியா , எ. பிறைசூடி, திருமதி எஸ். பிறேமாவதி, திருமதி .ஆர் .ராதா, பி. இராமகிருஷ்ணன் , என்.இரவீந்திரன் , ரீ.இரவீந்திரநாதன்.

திருமதி ஜெ.சாந்தகௌரி, ஆர்.சர்வேஸ்வரன் , திருமதி ரி. செல்வஜோதி , செல்வி பி. சாந்திகிறேஸ், திருமதி எஸ். சிவஞானவதனி, எ.சிவபாதம், எம். சிவதாசன்.

திருமதிபி.சோபனா, என்.சூரியகுமார் , திருமதி எஸ். சுனேத்திரா, திருமதி ஏ.சுதர் ஜினி , திருமதிஎஸ். தமிழ்ச்செல்வி, பி.தயாணந்தன் , திருமதி தேவமனோகரி ,செல்வி எஸ்.திவ்வியா , திருமதி எஸ். வனஜா , திருமதி வி. வசந்தா, திருமதி சீ.விஸ்வராணி, செல்வி பி.யாமினி. (அ-5)

# சதுரங்கப் போட்டி

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கிடையிலான சது ரங்கப் போட்டி எதிர்வரும் 26 , 27 ஆம் திகதிகளில் யாழ் . இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக யாழ். வலயக் கல்விப் பணிப்பாளர் வே.தி. செல்வரத்தினம் தெரிவித்துள்ளார்.

15 வயது மற்றும் 19 வயதுக்குட்பட்ட ஆண்,பெண் பிரிவுகளுக்கே இப் போட்டிகள் நடைபெறவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

# கல்வி முதுமாணிப் பரீட்சை சித்தியடைந்தோர் விபரம்

(யாழ்ப்பாணம்)

யாழ் . பல்கலைக்கழக கல்வி முதுமாணிப் பரீட்சை – 2005 இன் பெறுபேறுகள் வெளியிடப்பட்டுள்ளன. சித்தியடைந்தோரின் பெயர்கள் வருமாறு,

### யாழ்ப்பாணம்

திருமதி சி. அமிர்தலிங்கம், திருமதி பி.அன்ரு, என். பாலசந்திரன் , திருமதி ஜெ . பாலகிருஷ்ணன் , செல்வி. எம்.பி. பெனடிற் , செல்வி வி. கந்தசாமி ஐயர், திருமதி பி. கணேசமூர்த்தி ,எஸ். கோபிநாத், வண .பிதா கே.ஜேம்சிங்கராஜர் , செல்வி ஆர். ஜோசப் பிரான்சிய, திருமதி எச் .கந்தசாமி, திருமதி ஐ.கந்தசாமி ,வி. கருணலிங்கம்.

பி.காசிநாதன், கே.கோவிந்தராசா , செல்வி கே. குலசிங்கம் , திருமதி பி.குமாரசாமி, திருமதி ஏ.குமாரதாசன் , திருமதி எம். மகேந்திரன் , திருமதி வி.மகேந்திரன், செல்வி ஏ.எஸ். மரியாம்பிள்ளை, ஜே.யூட் மரியரட்ணம் , வி.மீனேஸ்வரன் .

திருமதி கே.முத்துக்கிருஷ்ணன் , செல்வி ஜே.முத்துக்குமாரு, திருமதி எஸ்.நடராசா ,திருமதி எஸ்.நந்தபாலன், கே. நித்தியானந்தன், எஸ்.பஞ்சாட்சரம், திருமதி கே. பஞ்சலிங்கம், எஸ்.பரமேஸ்வரன் , எம். பிரகலாதனன் , செல்வி ஆர்.ராஜா, திருமதி எம்.ரவீந்திரன்.

திருமதி என்.சீதரன் ,செல்வி எஸ்.சேனாதிராஜா, கே. சிவகுமார், என். சிவநேசன், கே.சுகுமார், வி.தற்பரன், திருமதி வி.தவந்தி, பி.தயாபரன், எஸ்.திரவியராசா , எஸ்.திசநாயகம்பிள்ளை, ஈ.துரைசிங்கம் , வி.எஸ். பி.துசிதரன், திருமதி ஜெ.உதயகுமார், திருமதி எம்.விக்னராஜா.

### வவுனியா வளாகம்

எம். அப்துல்கபூர் அஸ்ரப் , எ.அப்துல் ரசாக் , எஸ்.அப்துல் சமாட், எம். அழகுராஜா , திருமதி என்.அலெக்ஸ்கிப்சான், திருமதி பி.அமலதாஸ் , ரீ.அமிர்தலிங்கம், திருமதி ஆர். ஆனந்ததாசன் , செல்வி ஆர்.ஆறுமுகம் , திருமதி ஏ.அருந்தவராஜா , திருமதி எஸ். பாலகிருஷ்ணன் , ரீ.கிருஸ்ரிராஜா, திருமதி பி.கிளாறன்ஸ் , ஜெ.எ. குரூஸ், ஜெ.ஆர் டேவிட் அமிர் தலிங்கம்.

திருமதி எம். ஈஸ்வரன், பி.கணேஸ் , எஸ்.ஜெயச்சந்திரன் , திருமதி கே. ஜெயராஜ்,கே. கமலநேசன் , என்.கருணாகரன் , திருமதி எஸ்.கதிர்காமநாதன், திருமதி கே.மார்க்கண்டகுகானந்தன் , எ.டபிள்யூ. லம்பேட் . திருமதி கே. லோகேந்திரன், என்.லோகேந்திரன்,திருமதி ஐ.எம். முரளீதரன் ,திருமதி ஜெ.எம்.பரமநாயகம்,சி. ராஜக் கோன் , ஆர் .ராஜரட்ணம், திருமதி என் .இராசநாயகம் , ஏ.சி. சருபுடீன்.

எஸ். சர்வானந்தன் , திருமதி எஸ்.எஸ் .செபஸ்தியன் , கே.செல்வராஜா , கே.செல்வராஜா , திருமதி ஜே.தியாகராஜா , என்.தியாகராஜா, எஸ்.உதயச்சந்திரன் , திருமதி ரீ.உமாதேவன் , திருமதி வி.உதயகுமார் ,செல்வி என். வல்லிபுரம் , திருமதி பி.விஜயகுமார்,என்.விஜயரட்ணம்,திருமதி பி.கணேசலிங்கம், எம்.ஆர் .பி.டயசா, செல்வி என் .சீனித்தம்பி, எஸ்.தாவீது, வண. சகோ .ஜோசப் அகஸ்டின். (அ-5)

ஞானத்திற்கு அருகதையற்றவர்கள் ஞானிகளைப் போல வேடம் போடுவதனால் பொதுமக்களுக்கு ஞானிகள் மீதே துவேஷம் ஏற்படுகின்றது.

–பிளேட்டோ

வலம்புரி

# கண்காணிப்புக் குழுவின் பயன்தரா எச்சரிக்கை

வடபகுதியில் போர் வெடிக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகக் கண்காணிப்புக் குழு எச்சரிக்கை செய்துள்ளது. கண்காணிப்புக் குழு தனது எச்சரிக்கைக்குச் சான்றாக யாழ்ப்பாணத்தின் முகமாலை முன்னரங்குப் பகுதியிலும் மன்னாரிலும் வவுனியாவிலும் தாக்குதல் சம்பவங்கள் உச்சம் பெற்றுள்ளதாகவும் இரு தரப்பும் முன்னரங்குப் பகுதிகளில் படைக் குவிப்பில் ஈடுபட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது.

கண்காணிப்புக் குழுவின் மேற்போந்த எச்சரிக்கை குறித்துத் தமிழ் மக்கள் அதிகம் அலட்டிக் கொள்ளவில்லை.

ஏனெனில் கண்காணிப்புக் குழுவின் எச்சரிக்கைகள் மற்றும் அறிக்கைகள் இப்போது வெறுமைத்தனமாகி விட்டன. ஒரு காலத்தில் கண்காணிப்புக் குழுவின் செயற்பாட்டிற்கும் அதன் அறிக்கைகளுக்கும் பெரும் மதிப்பும் காத்திரமும் தமிழ் மக்களால் வழங்கப்பட்டது.

ஆனால் அந்த காத்திரங்கள் கண்காணிப்புக் குழுவினால் தொடர்ந்தும் கடைப்பிடிக்க முடியாமல் போய்விட்டது.

2002 இல் செய்து கொள்ளப்பட்ட யுத்த நிறுத்த உடன்படிக்கை தற்போது செயலிழந்துள்ளமையால் அதன் வழித்தோன்றலான கண்காணிப்புக் குழுவின் செயற்பாடுகளும் செயலிழந்துள்ளதாகவே பொருள்படும்.

யுத்த நிறுத்த உடன்படிக்கை தொடர்ந்தும் அமுலில் இருக்கும், அதனை போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழு கவனித்துக் கொள்ளும் என்ற நம்பிக்கைகள் தவிடுபொடியாகிவிட்டன.

வெளிநாட்டைச் சார்ந்த கண்காணிப்புக் குழுவினர் அதிகாரமற்றவர்களாகவே இருந்துள்ளனர். அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையே முரண்பாடு ஏற்பட்டால் அதனைச் சீர் செய்வது என்பதுடன் குழுவின் பணி முடிபடைந்து விடுகின்றது. இங்குதான் கண்காணிப்புக் குழுவின் ஒற்றைத்தன முகாமைத்துவம் வெளிப்படுகின்றது.

அதாவது அரச படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே முரண்பாடு - மோதல்கள் ஏற்பட்டால் மோதல்கள் முடிந்த பின்னர் சம்பவ இடத்திற்குச் செல்லும் கண்காணிப்புக் குழுவினர் குறித்த் சம்பவம் தொடர்பில் மெளனமாக இருந்து விடுகின்றனர்.

மெளனமாக இருக்க முடியாது குற்றத்தை உரிய தரப்பு மீது சுமத்தியாக வேண்டும் என்ற நினைப்பில் அறிக்கை விட்டால் அதனை சம்பந்தப்பட்ட தரப்பு அடியோடு மறுத்து விடுகின்றது. அதன் பின்னர் கண்காணிப்புக் குழுவின் நடவடிக்கை எதுவுமின்றி கைவிடப்படுகின்றது.

இறுதியில் அரசு இத்தனை தடவைகளும் விடுதலைப்புலிகள் இத்தனை தடவையும் யுத்த நிறுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபட்டுள்ளனர் என்ற ஒட்டுமொத்த அறிக்கையுடன் கண்காணிப்புக் குழுவின் பணி முடிபடைந்து விடுகின்றது.

உண்மையில் யுத்த நிறுத்தத்தை ஒரு தரப்பு மீறுகின்ற போது அது விடயத்தில் கடுமையான நடவடிக்கை எடுத்தாக வேண்டும். அவ்வாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்குமாயின், இன்றைய அவலநிலை ஏற்பட்டிருக்க மாட்டாது என அடித்துக் கூறலாம்.

தவறு விடுகின்ற போது அதற்குரிய விசாரணைகளும் தண்டனைகளும் இல்லையாயின் தவறுகள் தாராளமாவதை யாராலும் தடுத்து விட முடியாது.

இதுவே போர் நிறுத்த ஒப்பந்தத்தின் உறங்கு நிலைக்கு காரணமாகும். ஆக, ஆரம்ப கட்டத்தில் கண்காணிப்புக் குழு வலுவற்றதாக இயங்கியமையால் இன்று அதன் எச்சரிக்கைகளை யாருமே செவிசாய்ப்பதாகவில்லை.

# இலங்கைத் தூதுவரின் குற்றச்சாட்டுக்கு நோர்வே உத்தியோகபூர்வமாக மறுப்பு

(கொழும்பு)

நோர்வே கடவுச்சீட்டுக்கள் பெருந்தொகையில் திருடப்பட்டதாகவும் அதில் தமிழீழ விடுதலைப்புலிகள் மற்றும் அல்குவைதாவுக்குத் தொடர்பிருப்பதாகவும் அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் பேர்னார்ட் குணதிலக்க குற்றஞ்சாட்டியுள்ளதை நோர்வே உத்தியோகபூர்வமாக மறுத்துள்ளது.

நோர்வே வெளிவிவகார அமைச்சு நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நோர்வே கடவுச்சீட்டுகள் ஒரு லட்சத்து 30 ஆயிரம் திருடப்பட்டதாகவும் 700 நிரப்பப்படாத நோர்வே கடவுச் சீட்டுகள் தாய்லாந்தில் பறிமுதல் செய்யப்பட்டதாகவும் இலங்கை உட்பட இதர ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இதில் தமிழீழ விடுதலைப்புலிகளுக்குத் தொடர்பிருப்பதாகவும் இந்த நோர்வே கடவுச்சீட்டுகள் அல்குவைதா அமைப்புக்கு மீள வழங்கப்பட்டதாகவும் கூறப்பட்டது. எந்தவித அடிப்படையுமின்றி ஒன்றுக்கொன்று தொடர்பற்ற விடயங்களை இணைக்கும் வகையில் இத்தகைய செய்தி வெளியிடப்பட்டது.

மற்றைய நாடுகளை ஒப்பிடுகையில் நோர்வேயானது தேசிய பயண ஆவணங்களை குற்றவாளிகள் சட்டவிரோதமாகப் பயன்படுத்துவதைத் தடுத்து நிறுத்த விரும்புகின்றது. கடந்த 10 ஆண்டுகளில் காணாமல் போனஒரு லட்சத்து 30 ஆயிரம் கடவுச் சீட்டுக்கள் தொடர்பாக சர்வதேச பொலிஸுக்கு நோர்வே தகவல் அளித்துள்ளது. காணாமல் போன மற்றும் திருடப்பட்ட இக் கடவுச் சீட்டுகள் தொடர்பாக பொலிஸார் வழக்குப் பதிவு செய் துள்ளனர். ஐரோப்பிய நாடுகளை ஒப்பிடுகையில் இது குறிப்பிடத்தக்களவு குறைவானதாகும் என அவ் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-5)

# வடக்கு - கிழக்கிலுள்ள இளைஞர்கள் விரக்தியடையும் சூழல் உருவாகி வருகிறது

## பிரதி அமைச்சர் மயோன் முஸ்தபா உரை

(கல்முனை)

தமிழ் - முஸ்லிம் சமூகங்கள் இரண்டும் ஒற்றுமைப்படுவதன் மூலமே நகர அபிவிருத்தித் திட்டத்தையும் சுனாமி மீள்கட்டுமானப் பணிகளையும் வெற்றிகரமாக முன்னெடுக்க முடியும் என உயர் கல்விப் பிரதி அமைச்சர் எம்.எம்.மயோன் முஸ்தபா கூறினார்.

கல்முனைத் தமிழ்ப் பிரதேச செயலகத்தில் நடைபெற்ற கமநெகும திட்டம் தொடர்பான கலந்துரையாடலில் உரை நிகழ்த்தும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். பிரதேச செயலர் வி.வாசுதேவன் தலைமையில் இடம்பெற்ற இந் நிகழ்வில் பிரதி அமைச்சர் முஸ்தபா மேலும் பேசுகையில்,

காணிப் பிரச்சினை காரணமாகவே கல்முனையின் நகர அபிவிருத்தித் திட்டத்தை முன்னெடுக்க முடியாதிருக்கின் றது. எனினும் இப்போது வயல் நிலத்தை நிரப்பி இத்திட்டங்களை மேற்கொள்வதற்கான ஆரம்ப நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றோம்.

இதற்கு இப் பிரதேச தமிழ் - முஸ்லிம் மக்களின் ஒற்றுமை மிகவும் அவசியமாகும். பழைய கசப்புணர்வுகளை மறந்து மீண்டும் எம்மிடையே புத்துணர்வும் சகோதரத்துவமும் உருவாக வேண்டும். இது அரசியல் தலைமைத்துவங்களிடத்தில் இருந்து ஆரம்பிக்க வேண்டும்.

இன்று வடக்குக் கிழக்கிலுள்ள பல்கலைக்கழகங்களிலும் பாடசாலைகளிலும் கல்வி நடவடிக்கைகள் பாதிக்கப்பட்டுள்ளன. இளைஞர்கள் மீண்டும் விரக்தியடையும் சூழ்நிலை உருவாகி வருகின்றது.

கல்விச் சமூகத்தை அச்சுறுத்தும் சம்பவங்கள் அதிகரித்து வருகின்றன. எமது நாடு இன்று 59 வருடங்கள் பின் நோக்கிச் சென்றிருக்கின்றது. பொருளாதார நெருக்கடி அதிகரித்துள்ளது. சர்வதேச சமூகம் சந்தேகக் கண்கொண்டு நோக்குகின்றது.

உலக நாடுகள் பல இலங்கைக்கு வழங்கி வருகின்ற நிதியுதவிகளை நிறுத்துவதற்கும் ஆலோசித்து வருகின்றன. இவ்வாறான ஒரு இக்கட்டான சூழ்நிலையில்தான் மிகவும் பின்தங்கியுள்ள எமது பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கான முயற்சிகளை மேற்கொள்வதற்கு முயற்சி எடுத்து வருகின்றோம் என்றார். இக் கூட்டத்தில் திணைக்களத் தலைவர்கள், உயர் அதிகாரிகள் மற்றும் கிராம சேவகர்களும் கலந்து கொண்டனர். (ச-5)

# இராணுவத் தளபதியும் கடற்படைத் தளபதியும் உரையாடாமல் எப்படிப் போரை வெல்ல முடியும்?

## ஐக்கிய தேசியக் கட்சி கேள்வி

(கொழும்பு)

இலங்கை இராணுவத் தளபதியும் கடற்படைத் தளபதியும் ஒருவருடன் ஒருவர் கதைப்பதில்லை. இந்த இலட்சணத்தில் நீங்கள் எவ்வாறு போரைத் துல்லியமாக நடத்தப் போகின்றீர்கள் என்று ஐக்கிய தேசியக் கட்சின் முன்னாள் அமைச்சரும் தவிசாளருமான திலக் கருணாரட்ண அரசாங்கத்திடம் கேள்வி எழுப்பியுள்ளார்.

லங்கா தீப ஊடகவியலாளர்களுடன் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றின் போதே அவர் இவ்வாறு கேள்வி எழுப்பியிருக்கின்றார். அங்கு அவர் மேலும் தெரிவித்ததாவது,

முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்தை போரின் மூலம் சபூமால் அரசனாக முயன்றார். தற்போதைய தளபதி சரத் பொன்சேகா போரின் மூலம் தன்னை கதாநாயகனாக அடையாளப்படுத்த முயன்றுள்ளார்.

போரானது முறையாக நடத்தப்படவில்லை. இது சரத் பொன்சேகா, கோத்தபாய ராஜபக்ஷ போன்ற சிலரினது தேவைகளுக்கு ஏற்பவே நடத்தப்படுகின்றது. படையினரின் தரப்பில் அது நியாயமானதல்ல.

சிறப்பு அதிரடிப் படையினர் கிழக்கில் படை நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தார்கள். மன்னாரை கைப்பற்றும் நடவடிக்கையை மேற்கொள்ளுமாறு சிறப்புப் படையின் தளபதியான கேணல் பிரசன்ன சில்வாவை இராணுவத் தளபதி கேட்டிருந்தார்.

எனினும் தமது குடும்ப உறுப்பினர்களைச் சந்திக்காது நீண்ட காலம் பதுங்குகுழிக்குள் சிறப்புப் படையினர் முடங்கி கிடக்கின்றனர். இதனால் அவர்களது உளவியல் உறுதி வீழ்ச்சி கண்டுள்ளது. எனவே மன்னார் மீதான நடவடிக்கையில் அவர்கள் அதிகளவில் இறக்க நேரிடலாம் என்று பிரசன்ன சில்வா தெரிவித்திருந்தார்.

ஆனால் அது தொடர்பாக எனக்கு அக்கறையில்லை. ஆனால் எனக்குப் போரில் வெற்றி தேவை என்று பொன்சேகா பதிலளித்திருந்தார். எனினும் இறப்பதற்காக எனது படை வீரர்களை அங்கு அனுப்ப முடியாது என பிரசன்ன கூறியதனைத் தொடர்ந்து அவரை உடனடியாகப் பதவி விலகுமாறு பொன்சேகா பணித்திருந்தார் என்றார் திலக் கருணாரட்ண. (ச-5)

# தி.மு.கவின் 'கலைஞர் ரீவி'

(சென்னை)

கருணாநிதியின் பிறந்த நாளன்று ராஜ் ரீவியுடன் இணைந்து கலைஞர் ரீவி என்ற புதிய தொலைக்காட்சி சேவை ஆரம்பிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

மதுரைச் சம்பவத்தைத் தொடர்ந்து சன் ரீவிக் குழுமத்திற்கும் தி.மு.கவுக்கும் இடையே கருத்து வேறுபாடு ஏற்பட்டது.

இதனையடுத்து தி.மு.க. தலைமை அலுவலகமான அறிவாலயத்திலிருந்து சன்ரீவி அலுவலகம் வேறு இடத்திற்கு மாற்றப்படவுள்ளது. இந்நிலையில் தங்களுக்கென்று தனியான தொலைக்காட்சிச் சேவை வேண்டும் என்று தி.மு.க. மூத்த தலைவர்கள் கருத்துத் தெரிவித்தனர்.

இதனையடுத்து ராஜ் ரீவியுடன் இணைந்து தி.மு.க. புதிய தொலைக்காட்சி சேவையை ஆரம்பிக்கவுள்ளது. அந்த புதிய சேவைக்கு கலைஞர் ரீவி என பெயரிடப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது. இதற்கான ஏற்பாடுகள் நடத்து வருகின்றன. முதலமைச்சர் கருணாநிதியின் பிறந்த நாளான ஜூன் 3 ஆம் திகதி கலைஞர் ரீவி உதயமாகவுள்ளது. (ச-5)

# அலங்கார உற்சவம்

யாழ்ப்பாணம் திருவண்ணை நகர்கில்னர் ஒழுங்கை அருள்மிகு மகாமாரி அம்பாள் திருக்கோவில் அலங்கார உற்சவம் நாளை மறுதினம் வெள்ளிக்கிழமை ஆரம்பமாகின்றது.

எதிர்வரும் 10 ஆம் திகதி வரை நடைபெறும் இவ் உற்சவத்தில் தினமும் அபிஷேகமும் அதனைத் தொடர்ந்து வசந்த மண்டபப் பூஜையும் அம்பாள் வெளிவீதி உலாவும் இடம் பெறும். (அ)

# தொழில்நுட்பக் கல்லூரிப் பயிற்சி நெறிகளுக்கு விண்ணப்பம் கோரல்

(கொழும்பு)

2007/2008 ஆம் கல்வி ஆண்டுக்காக நாடு முழுவதுமுள்ள 38 தொழில் நுட்பக் கல்லூரிகளில் நடத்தப்படும் கற்கை நெறிகளுக்கு மாணவர்களைச் சேர்த்துக் கொள்வதற்காகத் தகைமையுடையவர்களிடமிருந்து தொழில்நுட்பக் கல்வி பயிற்சித் திணைக்களம் விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

ஒவ்வொரு கற்கை நெறியையும் தொடர்வதற்கென விண்ணப்பதாரிகள் கொண்டிருக்க வேண்டிய தகைமைகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தால் அறிவிக்கப்பட்டுள்ள மாதிரி விண்ணப்பப் படிவத்திற்கு அமையத் தயாரித்துப் பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பங்களை எதிர்வரும் ஜூன் மாதம் 15 ஆம் திகதி முன்னர் கிடைக்கக் கூடிய வகையில் உரிய தொழில் நுட்பக் கல்லூரியின் அதிபருக்குப் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்க வேண்டும் என தொழில்நுட்பக் கல்விப் பயிற்சித் திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி ஏ.எல்.உபயசேகர அறிவித்துள்ளார்.

இவ் விண்ணப்பம் கோரல் தொடர்பான வர்த்தமானி அறிவித்தலை வலம்புரி அலுவலகத்தில் பார்வையிட முடியும். (ச-5)

# வடமராட்சியில் இருவரை காணவில்லையென முறைப்பாடு

வடமராட்சியில் பாடசாலை மாணவன் உட்பட இருவரைக் காணவில்லையென இலங்கை மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கரணவாய் கிழக்கு கரவெட்டியைச் சேர்ந்த கிருஷ்ணபிள்ளை விவேகானந்தன் (வயது 34) கடந்த 19 ஆம் திகதி முதல் காணாமல் போயுள்ளார்.

அன்று நெல்லியடிச் சந்தைக்கு சென்ற பின்னர் இவர் இதுவரை வீடுதிரும்பவில்லை நெல்லியடிப் பகுதியில் நிதி நிறுவனம் ஒன்றில் கடமையாற்றி வருபவர் என தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை கரவெட்டி விக்னேஸ்வரா வித்தியாலய உயர் தர மாணவர் ஒருவர் கடந்த மாதம் 25 ஆம் திகதி முதல் காணவில்லையென மனித உரிமை ஆணைக்குழுவில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கரவெட்டி மத்தியைச் சேர்ந்த சிதம்பரப்பிள்ளை விமல்ராஜ் (வயது 17) என்ற மாணவனே காணாமல் போயிருப்பதாக மனித உரிமை ஆணைக்குழுவின் யாழ்.அலுவலகத்தில் முறைப்பாடுசெய்யப்பட்டுள்ளது. (ச-5)

## யாழ்.மாணவர்கள்...

மாவை சேனாதிராசா கொண்டு வந்த விசேட ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதத்தின் மீதான உரையிலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

ஊரடங்கு வேளையில் ஆயுததாரிகளால் கடத்தப்பட்ட இம் மூன்று பாடசாலை மாணவர்களையும் விடுவிக்க அரசு நடவடிக்கை எடுக்கவேண்டும். இல்லையெனில் அரசு புத்தகம் தூக்கும் கையால் துப்பாக்கி ஏந்த வைக்கப் போகிறதா? என கேள்வி எழுப்பினார்.

இவ்வாறு அன்று நடந்த ஆட்சியாளர்களின் தவறினாலேயே இன்று இரத்த ஆறு ஓடுகின்றது.தமிழ் மாணவர்களுக்கு சிங்கள ஆட்சியாளர்கள் தொடர்ந்தும் பாதிப்பை ஏற்படுத்தி வருகின்றனர்.

எனவே கடத்தப்பட்ட மூன்று மாணவர்களையும் திருப்பி ஒப்படையுங்கள். இல்லையேல் ஐக்கிய நாடுகள் சாசனத்தின் மனித உரிமை மன்றத்தில் முறையிடப்படும் என தமிழ்ப் பாராளுமன்ற உறுப்பினர் சிறிகாந்தா எச்சரித்துள்ளார். (ச-5)

## சுன்னாகத்தில்...

சடலத்திற்கு அருகாமையில் மோட்டார் சைக்கிள் ஒன்றும் மீட்கப்பட்டுள்ளது. சம்பவம் தொடர்பான விசாரணைகளை மேற்கொண்ட மல்லாகம் நீதிவான் திருமதி சறோஜினி இளங்கோவன் சடலத்தை பிரேதபரிசோதனைக்காக யாழ்.போதனா வைத்திய சாலையில் ஒப்படைக்குமாறு உத்தரவிட்டார். (ச-5)

## தற்கொலைப்...

மாதம் களப்புப் பகுதியின் நீருக்கடியில் மறைத்து வைத்துவிட்டே சென்றிருந்தனர்.

ஆனால் இப் பகுதியில் அண்மையில் நீர் மட்டம் குறைவடைந்ததையடுத்து இப்படகு வெளியே தெரிந்தது. இதனைக் கண்ட மீனவர் ஒருவர் படையினருக்கு வழங்கிய தகவலொன்றின் அடிப்படையிலேயே படையினர் இப் படகினை கைப்பற்றினர் என ஊடக மையம் தெரிவித்துள்ளது. (ச-5)

## சுதந்திரக்கட்சியினது தீர்வுயோசனை...

தின் முக்கிய அமைச்சர்களே இந்த யோசனையை விமர்சித்துள்ளனர். மிகவும் பழைமையான கோட்பாட்டை சுதந் திரக்கட்சி முன்வைத்துள்ளது.

சர்வகட்சி பிரதிநிதிகள் குழுவின் தலைவர் அமைச்சர் திஸ்ஸ விதாரண சில மாதங்களுக்கு முன்னர் தீர்வுயோசனையொன்றை முன்வைத்திருந்தார். அந்த யோசனையை ஐக்கிய தேசியக்கட்சியும் ஏற்றுக்கொண்டது.

ஆனால் அரசாங்கத் தரப்பினர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. அமைச்சர் திஸ்ஸ விதாரணவின் யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு பேச்சுவார்த்தையை நடாத்த முடியும் என்ற நிலைப்பாட்டில் ஐக்கிய தேசியக்கட்சி இருக்கின்றது.

இதேவேளை சிறிலங்கா சுதந்திரக்கட்சி தற்போது முன்வைத்துள்ள யோசனையானது யதார்த்தமற்ற யோசனைக்கு சிறந்த உதாரணமாகும். இந்த நாட்டில் பிரச்சினை என்ன? என்பது உணரப்படாமல் இந்த யோசனை தயாரிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் பிரதான அரசியல் கட்சிகளே இந்த யோசனையை முழுமையாக நிராகரித்து விட்டன. இந் நிலையில் தமிழ் மக்களும் விடுதலைப்புலிகளும் எவ்வாறு ஏற்றுக்கொள்வார்கள்? பிரச்சினையை மேலும் உக்கிரமாக்கி விடுகின்ற தன்மையையே சுதந்திரக்கட்சியின் யோசனைகள் கொண்டுள்ளன.

இதனால் புதிய பிரச்சினைகள் உருவாகி விடும் அபாயமுள்ளது. பிரச்சினைகளை தீர்க்கக்கூடிய தீர்வுயோசனைகளையே நாம் முன்வைக்க வேண்டும். மாறாக பிரச்சினைகளை உருவாக்குகின்ற யோசனைகளை முன்வைக்கின்றமை நாட்டின் சாபக்கேடாகும். அரசாங்கம் முதலில் யதார்த்தமான தீர்வுயோசனையை முன்வைக்க வேண்டும். தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக் கூடிய யோசனையை தயாரிக்க வேண்டும். (ச-5)

## வடக்கு,கிழக்கு மாகாணங்களுக்கு...

இலங்கையின் 35 ஆவது குடியரசு தினமான நேற்று திருகோணமலையிலுள்ள கிழக்கு மாகாணத்திற்கான ஆளுநரும் வடக்கு மாகாண பதில் ஆளுநருமான மொஹான் விஜய விக்கிரமவினால் அவரது அலுவலகத்தில் நடந்த விசேட நிகழ்ச்சி ஒன்றிலேயே இக் கொடிகள் தனித்தனியாக ஏற்றிவைக்கப்பட்டன.

முன்னைய இணைந்த வடக்குக்கிழக்கு மாகாணத்தின் கொடியில் யாழ் மற்றும் மீன் சின்னங்கள் இடம் பெற்றிருந்தன. ஆனால் தற்போது வட மாகாணக் கொடியில் சூரியன் சின்னமும் கிழக்கு மாகாணத்திற்கான கொடியில் கழுகு, மீன் மற்றும் சிங்கம் ஆகிய சின்னங்களும் இடம்பெற்றுள்ளன.

இக் கொடிகளின் வடிவத்தில் அமைந்துள்ள பொருட்களையும் உருவாக்கிய அமைப்பையும் ஆளுநர் நேற்று வெளியிட்டார்.

*வடக்கின் கொடி*

நான்கு புறமும் நீல நிறத்தை கொண்ட கோடு வரையப்பட்டுள்ளது. கொடியின் உட் பகுதியில் சிவப்பு நிறமும் அடுத்து வெள்ளை நிறமும் மூன்றாவதாக பச்சை நிறமும் காணப்படுகின்றது.வெள்ளை நிறப் பகுதியின் நடுவே சூரியன் சின்னம் பொறிக்கப்பட்டதாக வடக்கின் கொடி வடிவமைக்கப்பட்டுள்ளது. அவற்றின் விளக்கம் வருமாறு;

✡ கொடியின் நான்கு பக்கங்களையும் சுற்றி அமைந்துள்ள நீல நிறம்-கடல் வளம் சூழ்ந்த மாகாணமாக குறிப்பிடப்படுகின்றது. நடுவே மூன்றாகப் பிரிந்துள்ள நிறங்களில்

✡ பச்சை:பசுமைத் தன்மையும் விவசாயமும்

✡ சிவப்பு:தொழில்-தொழித்திறன்

✡ வெள்ளை: பொதுநோக்கு, சமாதானம், கூடி வாழ்தல்.

✡ நடுவே அமைந்துள்ள சூரியன் சின்னம்: சக்தி வளமும் இயற்கை சக்தியும்.

இக் கொடியினை யாழ்.பல்கலைக்கழக கல்விச் சமூகமும் மூதறிஞர்களும் வடிவமைத்துள்ளனர்.

*கிழக்கின் கொடி*

கிழக்கு மாகாணக் கொடி மண்ணிறமாக அமைக்கப்பட்டுள்ளது. இதில் இடது பக்க கீழ் மூலையில் மீன் சின்னமும் நடுவே மேற்புறமாகக் கழுகுச் சின்னமும் வலது பக்க கீழ் மூலையில் சிங்கமும் பொறிக்கப்பட்டுள்ளது.

கொடியினைச் சுற்றி நான்கு கரைகளிலும் உட்புறமாக நீல நிறமும் வெளிப்புறமாக கருநீல நிறமும் காணப்படுகின்றது. அத்துடன் உட்புற நான்கு மூலையிலும் சூரியன் சின்னம் பொறிக்கப்பட்டதாக கொடி வடிவமைக்கப்பட்டுள்ளது.

கொடியின் நடுவே அமைந்துள்ள சின்னங்களில்

✡ கழுகு:திருகோணமலை மாவட்டம்

✡ மீன்:மட்டக்களப்பு மாவட்டம்

✡ சிங்கம்:அம்பாறை மாவட்டம்

✡ நான்கு மூலைகளிலும் உள்ள சூரியன்: பரந்துள்ள நிலப்பரப்பில் ஒளிமயமான சக்தி

✡ மண்ணிறம்:மஞ்சள் நிற கோடுகள் பாரம்பரியக் கோட்டினை குறிக்கின்றன.

✡ நீலம்:கங்கை ஆறுபோன்ற இயற்கை வளங்கள்

✡ கொடியின் நான்கு புறமும் அமைந்துள்ள கரும்நீலநிறம்:மூன்று கடல் எல்லைகளையும் குறிக்கின்றன.

இக் கொடியினை கிழக்கு மாகாண கலாசார திணைக்களம் வடிவமைத்துள்ளதாகவும் ஆளுநர் மொஹான் விஜய விக்கிரம குறிப்பிட்டார். இதேவேளை உயர் நீதிமன்ற உத்தரவைத்தொடர்ந்து வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்கள் பிரிக்கப்பட்டு கடந்த ஜனவரி மாதம் முதல் நிர்வாக அலகுகள் பிரிக்கப்பட்டன. தற்போது கொடிகளும் பிரிக்கப்பட்டுள்ளமையானது பிரிப்பினை நிரந்தரமாக்குவதற்காகவே என்கின்றார்கள் ஆய்வாளர்கள். (ச-1,3)

## வன்னிப்பகுதியில்...

வீழ்ந்து வெடித்திருப்பதாகவும் இதனால் எந்தவித சேதங்களும் ஏற்படவில்லை எனவும் இளந்திரையன் கூறிய போதிலும் மாங்குளத்தில் உள்ள விடுதலைப்புலிகளின் முகாம் மீதே தாக்குதல் நடாத்தப்பட்டதாக விமானப்படைப் பேச்சாளர் கப்டன் அஜந்த சில்வா அறிவித்துள்ளார்.

இதேவேளை விமானப்படை மேற்கொண்டு வரும் வான் மற்றும் எறிகணைத் தாக்குதல்கள் காரணமாக சிறுவர்கள் உளவியல் பாதிப்புக்கு உள்ளாகும் நிலை அதிகரித்து வருவதாக பொதுமக்கள் கவலை வெளியிட்டுள்ளனர். (ச-5)

# நாட்டின் பிரதான உரிமைகள்...

அவர் மேற்கண்டவாறு கூறினார்.

யோசனை தொடர்பாக அவர் மேலும் கூறியதாவது, எமது கட்சியின் தீர்வுயோசனைகள் தயாரிக்கப்பட்டு விட்டன.

தற்போது எமது கட்சியின் சட்ட நிபுணர்கள் இந்த யோசனைகளின் சட்டநிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்து வருகின்றனர்.

அத்துடன் சில திருத்தங்களும் செய்யப்படவுள்ளன. இந்த நடவடிக்கைகள் முடிந்தவுடன் அடுத்தவாரம் அளவில் சர்வகட்சிப் பிரதிநிதிகள் குழுவுக்கு தீர்வுயோசனையை நாங்கள் சமர்ப்பிப்போம்.

ஜாதிக ஹெல உறுமய தயாரித்துள்ள இனப்பிரச்சினைக்கான யோசனையில் முக்கிய விடயங்கள் பல காணப்படுகின்றன. அதாவது,ஒற்றையாட்சி என்ற கட்டமைப்பின் கீழேயே நாட்டின் ஆட்சி முறைமை இருக்க வேண்டும்.

இந்த நாட்டின் தேசிய உரிமைகள் சிங்கள இனத்தவர்களையே சாரும். நாட்டின் கலை கலாசாரக் கட்டமைப்பை உருவாக்கியவர்கள் சிங்கள மக்கள் என்பதால் சிங்கள மக்களே நாட்டின் தேசிய இனமாக கருதப்பட வேண்டும் என்பதுடன் அனைத்து விடயங்களிலும் முன்னுரிமை அவர்களுக்கே வழங்கப்படவேண்டும்.

நாட்டில் இனப்பிரச்சினை என்று ஒன்று இல்லை என்ற விடயத்தை நாங்கள் உறுதியாக முன்வைக்கின்றோம். தேசிய மதமாக பௌத்த மதம் கணிக்கப்படவேண்டும். ஏனைய மதங்களும் இருக்கலாம். ஆனால் பௌத்த மதமே ஏகபோக உரிமை கொண்ட மதமாக இருக்கும்.

நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதி முறைமை தொடர்ந்து அமுலில் இருக்க வேண்டும். ஆனால் ஜனாதிபதி பாராளுமன்றத்திற்கு பதில் கூறுபவராக இருக்கவேண்டும். அதேவேளை ஜனாதிபதிக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யக்கூடிய உரிமை மக்களுக்கு இருக்கவேண்டும்.

அமைச்சர்களின் எண்ணிக்கை 20 தொடக்கம் 25 ஆக இருக்கவேண்டும். இது அரசியல் அமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டும். தேர்தல் என்ற வகையில் ஜனாதிபதி தேர்தலும், பிரதேச அதிகார சபைகளுக்கு உறுப்பினர்களை தெரிவு செய்ய தேர்தலுமே இடம்பெற வேண்டும்.

மேற்கண்ட விடயங்களை பிரதானமாகக் கொண்டே எமது கட்சியின் யோசனைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவை விரைவில் வெளியிடப்படும். (ச-5)


# மரண அறிவித்தல்

## திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம்



காரைநகர் பலகாட்டை பிறப்பிடமாகவும் நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சரஸ்வதி சுப்பிரமணியம் (22.05.2007) காலமானார்.

இவர் ஆறுமுகம் செல்லாச்சி ஆகியோரின் அன்பு மகளும், சுப்பிரமணியம் (P.W.D. பிரதம இலிகிதர்) அவர்களின் அன்பு பாரியாரும், சத்தியவதி, பாக்கியராசா (குபேரன் களஞ்சியம், விசால் பான்சி, உரிமையாளர்),பாக்கியவதி (வலம்புரி பத்திரிகை மூகாமைத்துவ உதவியாளர்), புஸ்ப வதி, கலாவதி, குணவதி, தவமலர் ஆகியோரின் அன்புத் தாயாரும், நாகராசா, தசிகா தேவி,சிவநேசன்,கோபாலசுதந்திரன், பத்மசிங்கம், முருகவேள், தகுலேந்திரன் ஆகியோரின் அன்பு மாமியாரும்,

சதீஸ்குமார்,சசிரேகா,விஜயபானு, இந்துஷன், தனுஷன், திவ்யா, செந்தூரன், மயூரன்,அனுஷன்,கிருத்திகா,காயத்ரி,தர்சிகா, விசாகபவன், சுவஸ்டிகா, சோபிகா ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்ற நடராசா, இரத்தினம் ஆகியோரின் அன்புச்சகோதரியும் ஆவார்.இவரது ஈமக்கிரியை 24.05. 2007 வியாழக்கிழமை 8 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று கோம்பயன்மணல் மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
க.சுப்பிரமணியம் (கணவர்)
சி.பாக்கியவதி (மகள்)

(சி-079)


## ஐ.தே.கட்சியும் ஜே.வி.பியும்...

கையிலேயே மேற்கண்ட வாறு கூறினார். அவர் மேலும் கூறியதாவது; இனப்பிரச்சினையை பேச்சுவார்த்தை ஊடாக தீர்க்க வேண்டும் என்பதில் அரசாங்கம் உறுதியாக இருக்கின்றது.

அந்த வகையிலேயே சிறிலங்கா சுதந்திரக்கட்சி தீர்வுயோசனையை முன்வைத்துள்ளது. தீர்வுயோசனையில் குறைபாடுகள் இருக்கலாம். ஆனால் இந்த யோசனை சர்வ கட்சி பிரதிநிதிகள் குழுவுக்கு சமர்ப்பிக்கப் படும்.

அதன் பின்னர் சர்வகட்சி பிரதிநிதிகள் குழு மூலம் வெளியிடப்படுகின்ற தீர்வுயோசனை தமிழ் மக்கள் ஏற்றுக்கொள்ளக்கூடியதாக இருக்கும். சுதந்திரக்கட்சி தீர்வுயோசனையை முன்வைத்தமை முக்கிய விடயமாகக் கருதப்படுகின்றது.

இருப்பினும் ஐக்கிய தேசியக்கட்சியும் ஜே.வி.பியும் இனப்பிரச்சினை தீர்வுசெயற்பாட்டில் பொறுப்பற்ற விதத்தில் நடந்து கொள்கின்றன. இனப்பிரச்சினை தீர்வு தொடர்பாக இதுவரை எந்தவொரு யோசனையையும் இரண்டு கட்சிகளும் முன்வைக்கவில்லை.

அரசாங்கத்தை ஐக்கிய தேசியக்கட்சி இதுவரை காலமும் விமர்சித்து வந்தது. அரசாங்கம் அரசியல் தீர்வை முன்வைக்காமல் காலம் கடத்தி வருவதாக ஐ.தே.க.குறை கூறியது. ஆனால் தற்போது அரசாங்கம் தீர்வுயோசனையை முன்வைத்து விட்டது.

இருப்பினும் ஐ.தே.க.இதுவரை தீர்வு யோசனை ஒன்றை தயாரிக்கவும் இல்லை; முன்வைக்கவும் இல்லை. அதேவேளை ஜே.வி.பி.சிறிலங்கா சுதந்திரக்கட்சியின் தீர்வு யோசனையை விமர்சிக்கின்றது.

ஆனால் அந்தக்கட்சி இதுவரை எந்த விதமான மாற்று யோசனையையும் முன்வைக்கவில்லை. தீர்வு யோசனைகள் ஏற்றுக் கொள்ளப்படுகிறதா? இல்லையா என்பது விவாதத்திற்குரிய விடயமாகும்.

ஆனால் யோசனை முன்வைக்கப்பட வேண்டும்.அந்த வகையில் பார்க்கும் போது ஐ.தே.கவும் ஜே.வி.பியும் வெறுமனே அரசை விமர்சிக்கின்றனவே தவிர ஆரோக்கியமான முறையில் இனப்பிரச்சினைக்குத் தீர்வுக்கு பங்களிப்பு வழங்குவதாக தெரியவில்லை. (ச)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ.ஸ்தாபனத்தாரால் இல.03, இரண்டாம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 23.05.2007 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.